# தேரழுந்தூர் வைபவம்



ஒப்பிலியப்பன் கோயில் ஸ்ரீ வரதாச்சாரி சடகோபன்

www.sadagopan.org



தேரழுந்தூர் கோயில்



# தேரழுந்தூர் வைபவம்

www.sadagopan.org

www.sadagopan.org



தேரழுந்தூர் தேர்

ஸ்ரீ:

க்ஷேமம் | பிரபவ வருஷம் வைகாசி மாதம் 9ம் நாள்
சனிக்கிழமை, ஸர்வ ஏகாதசி தினம்
உத்திரட்டாதி நக்ஷத்திரம்
May 23, 1987

அன்பு நிறைந்த சௌ.பத்மா, ஸ்ரீ அப்பா அவர்களுக்கு தங்கள் சடகோபன் அநேக நமஸ்காரங்கள். க்ஷேமம். போன கடிதத்தில் ஸ்ரீ ராமாவதாரம் பற்றி எழுதினேன். இந்த பிரபவ வருஷம் சர்வ ஏகாதசி கடிதத்தில் திருமங்கை மன்னனால் 45 பாசுரங்கள் மூலம் கொண்டாடப்பட்ட ஆமருவியப்பன் கோயில் கொண்டுள்ள சோழ நாட்டு திவ்ய தேசமாகிய திருவழுந்தூர் பற்றி எழுதுகிறேன். மாயவரம்- கும்பகோணம் ரயில் பாதையில் குற்றாலம் என்ற ஸ்டேஷனுக்கு அருகில் இந்த திவ்ய தேசமுள்ளது. திருமங்கை மன்னன் அவதரித்த திருக்குறையலூர், திருவழுந்தூர் சமீபமே உள்ளது. தன் பிறந்த ஊர் சமீபம் உள்ள சோழநாட்டு திருப்பதிகளில் திருமங்கை மன்னன் மிகுந்த பக்தியுடன் ஈடுபட்டு, ப்ரஸித்தமான பாசுரங்களை அருளியிருப்பது தெளிவான விஷயம். இந்த சம்ப்ரதாயத்தில், திருமங்கை மன்னன் திருவழுந்தூர் ஆமருவியப்பன் விஷயமாக நாற்பதுக்கும் மேற்பட்ட பாசுரங்கள் மூலம் தனது அத்யந்த பக்தியை வெளிப்படுத்தியிருக்கிறார். இந்த திவ்ய தேசம் காவேரி நதியின் நீர்வளத்தாலும், சோழ நாட்டின் நில வளத்தாலும் உயர்ந்தது. அதை மனதில் வைத்து, திருமங்கை ஆழ்வார் திருவழுந்தூரின் செல்வச்சிறப்பை தன் பாசுரங்களில் வெகுவாகக் கொண்டாடினார்.

## 1) திருவழுந்தூர் (தேரழுந்தூர்) என்ற பெயர் வரக்காரணம்

திருவழுந்தூர் என்ற திவ்ய தேசத்திற்கு தேரழுந்தூர் என்று மறு பெயரும் உண்டு. இதற்கு காரணம், வெகு நாட்களுக்கு முன் நடந்த ஒரு சம்பவம். ஸ்ரீ க்ருஷ்ணாவதார காலத்திற்கு முன்பு, உபரிசரவசு என்ற விஷ்ணுபக்தர் க்ஷத்ரிய வம்சத்தில் பிறந்து, ஸ்ரீமந் நாராயணனை பாஞ்சராத்ர ஆகம முறையில் விசேஷமாக ஆராதித்து மோக்ஷமடைந்து, நித்யசூரியாகி ஸ்ரீவைகுண்டத்தில் வாழ்ந்து வந்தார். தான் செய்த புண்ய பலத்தால், ஆகாய மார்க்கமாக (உபரி), செல்லும் (சர) தேருடைய வஸுவாக ஆகி உபரிசரவசு

www.sadagopan.org

என்ற பெயர் நிலைக்கப் பெற்றார். மஹா தர்மிஷ்டரான உபரிசரவசுவிடம், ஒரு சமயம், முனிவர்களும், தேவர்களும் தங்கள் அபிப்ராய பேதங்களைக் கேட்டு தகுந்த தீர்ப்பை அளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்கள். முனிவர்களும், தேவர்களும் தங்களுக்குள் ஏற்பட்ட சர்ச்சையில், உபரிசரவசு மத்யஸ்தராக இருந்து தகுந்த தீர்ப்பை அளிக்க வேண்டுமென வேண்டினார்கள். அவர்களிடையே ஏற்ப்பட்ட விவாதம் ஒரு யாகச் சடங்கு முறை பற்றியது. பசு சம்பந்தப்பட்ட யாகத்தில், பசுவை பலி கொடுத்து அதன் மாம்ஸத்தை ஹவிஸ்ஸாகக் கொடுப்பதே சரியான வழி என்று தேவர்கள் வாதம் புரிந்தார்கள். முனிவர்கள் தங்களுடைய தர்மானுஷ்ட பிரகாரம், பசுவை பலி கொடுக்காது, மாம்ஸம் சேராத பிஷ்ட பசு யாக முறையே தகுந்த வழி என உறுதியாகக் கூறினார்கள். உபரிசரவசு நீதிபதியாக இருந்து, நடுநிலைமை வஹித்து, சரியான யாக முறையை விளக்க வேண்டும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இரு கக்ஷிகளின் வாதங்கள் கேட்ட பின் உபரிசரவசுவிற்கு தர்ம சங்கடமான நிலை ஏற்ப்பட்டது. ந்யாயம் முனிவர்கள் பக்கம் இருப்பதை அறிந்த போதிலும், தேவர்களிடம் உள்ள அன்பால், தன் மனச்சாட்சிக்கு விரோதமாகவும், சாஸ்த்ரத்திற்கு விலக்காகவும், நடுநிலை தவறி, தேவர்கள் விவரித்த வழியே சரியான முறை என தீர்ப்புச் சொன்னார். தேவர்களிடம் பக்ஷபாதமாக நடந்து தர்மத்தை கைவிட்ட உபரிசரவசு பாதாள லோகம் அடைய வேணும் என்று முனிவர்கள் சபித்தார்கள். இந்த சாபத்தால், ஆகாய வீதியில் தங்கு தடை இல்லாது சஞ்சரித்த உபரிசரவசுவின் தேர் உடனே ஆகாயத்திலிருந்து விழுந்து பூமியில் அழுந்தியது. உபரிசரவசுவின் தேர் ஆமருவியப்பனின் க்ஷேத்ரத்தின் மண்ணில் அழுந்தி நகராது நின்றது. தான் செய்த அபராதத்திற்கு பரிஹாரமாக, உபரிசரவசு பல வருஷங்கள் ஆமருவியப்பனை ஆராதனம் செய்து, முனிவர்கள் சாபத்திலிருந்து விடுபட்டார். ஆமருவியப்பனும், உபரிசரவசுவிற்கு ப்ரத்யக்ஷமாகி அவருக்கு அருள் புரிந்தார். ராஜாவின் தேர் அழுந்திய திவ்ய தேசத்திற்கு தேரழுந்தூர் என்ற பெயரும் நிலைத்தது.

உபரிசரவசுவின் ஆகாயத்தேர் மற்ற எந்த இடங்களிலும் அழுந்தாது, ஆமருவியப்பன் ஸன்னிதானத்தில் அழுந்தியதற்கும் ஒரு விசேஷ காரண இருக்குமோ எனத் தோன்றுகிறது. “ஆமருவி” என்ற பெயரின் அர்த்தம், பசுமாடுகளிடம் வாத்ஸல்யமுடைய கண்ணன் என்பது. பசு விஷயமாகத் தப்புத் தீர்ப்பளித்த உபரிசரவசுவிற்கு புத்தி தெளிவதற்காக, பசுக்களிடம் அத்யந்த ப்ரேமை கொண்ட திருவழுந்தூர் க்ஷேத்ரநாதன் உபரிசரவசுவின் தேரைத் தன் திவ்ய தேசத்தின் எல்லையிலேயே அழுந்துமாறு செய்தான் எனத் தோன்றுகிறது. உபரிசரவசுவை

www.sadagopan.org

சிக்ஷிக்கும் போது முனிவர்களின் பெருமை மிகவும் ஸ்ரேஷ்டமானது என்ற உண்மையையும் ஆமருவியப்பன் வெளிப்படுத்தினான். தர்ம ஸம்ரக்ஷணத்தின் முக்யத்வத்தை விளக்கவும், திருவழுந்தூரில் ஆமருவியப்பன் தர்ம தேவதைக்கும் ப்ரத்யக்ஷமானான். இந்த க்ஷேத்ரத்தில், தர்மங்களின் முக்யத்வத்தை வெளிப்படுத்த ஆமருவியப்பன் தர்ம தேவதைக்கு ப்ரத்யக்ஷமானதோடு நிற்காமல், கருடனுக்கும் ப்ரத்யக்ஷமானான். கருடனுக்கு ப்ரத்யக்ஷமானதோடு நிற்காமல், கருடனை தன் கர்ப்ப க்ருஹத்தில், தனது இடது பக்கத்தில் நின்று வருமாறு அனுக்ரஹித்து, தன்னை ஸேவிக்க வந்த உபரிசரவசு, முனிவர்கள், தேவர்கள், மானிடர்கள் எல்லோருக்கும் தர்மானுஷ்டத்தின் அவச்யத்தை எடுத்துக் காட்டினான். கருடனுக்கு ஆமருவியப்பன் செய்த விசேஷ மரியாதையின் உள் அர்த்தத்தை அடுத்த பகுதியில் குறிப்பிடுகிறேன்.

## 2) தேரழுந்தூரில் கருடன் ஆமருவியப்பன் உடன் சமபீடம் ஏற்றதின் காரணம்

தேரழுந்தூரில் ஆமருவியப்பன் கோயில் கொண்டுள்ள விமானத்திற்கு கருட விமானம் எனப் பெயர். இந்த விமானத்தின் நிழலில், கிழக்கு திசை நோக்கி, நின்ற கோலத்தில் ஸேவை தரும் ஆமருவியப்பனின் இடது பாகத்தில் கருடனும் நிற்கிறான். சாதாரணமாக, ஸ்ரீவைஷ்ணவ ஸ்தலங்களில் கருட பகவான் தன் பிரபுவான ஸ்ரீமந்நாராயணனுக்கு எதிரே கை கூப்பிக் கொண்டு தனி ஸன்னதியில் எது கட்டளை என கேட்டுக் கொண்டு நிற்பார். இந்த ஸம்ப்ரதாயத்திற்கு விலக்கானவை திருநறையூர், ஸ்ரீ வில்லிபுத்தூர், தேரழுந்தூர் ஆகிய திவ்ய தேசங்கள். இந்த ஸ்தலங்களில் ஸ்ரீ வைனதேயப் பெருமானுக்கு தனி மரியாதை. தேரழுந்தூரில், ஆமருவியப்பனுடன் கர்ப்பக்ருஹத்திலேயே கருடன் நிற்பதற்கு காரணம், தர்மத்திற்கும் அவருக்கும் உள்ள விசேஷ உறவே. தர்மங்கள் எல்லாம் வேதங்களுள் அடங்கினவை என்பது நமது ஸித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கை. கருடனோ வேதஸ்வரூபி! கருடனின் வேதஸ்வரூபத்தை ஸ்ரீஸ்வாமி தேசிகன் "யத் பக்ஷஸ்த்தா த்ரிவேதி....த்ரிதாம்ன வாஹன இந்த்ர:" என ஸ்ரீகருட பஞ்சாசத்தில் விளக்கினார். கருடபகவானுடைய சிறகுகளில் மூன்று வேதங்களும் அடங்கியிருப்பதை "யத்பக்ஷஸ்த்தா த்ரிவேதி" என ஸ்ரீஸ்வாமி தேசிகன் மங்களாஸாஸனம் செய்தார். மறுபடியும் ஸ்ரீகருடதண்டகத்தில் வைனதேயன் வேதபுருஷன் என்ற தத்வத்தை "கருடம் அகில வேத நீட அதிரூடம்....ஈடே" என்ற வாக்யங்கள் மூலமாக விளக்கினார். கருடன் ஸகல வேதங்களாகிய கூட்டினுள் அமர்ந்திருக்கும் வேதபுருஷன் என நமஸ்கரித்துக் கொண்டார். அவரை தர்மங்களுக்கு

www.sadagopan.org

ப்ரமாணமான வேதங்களை ப்ரதிபலிக்கும் வேத ஸ்வரூபியாக எல்லோரும் புரிந்து கொள்ள ஆமருவியப்பன் தன் அருகிலேயே நிறுத்திக் கொண்டார். தர்மங்களிலிருந்து வழுவிய உபரிசரவசுவிற்கு அனுக்ரஹம் செய்ததால் ப்ரஸித்தமான ஸ்தலத்தில் தர்ம கர்ப்ப வேதஸ்வரூபனான கருடனுக்கு ஆமருவியப்பன் விசேஷ மரியாதை செய்தார்.

வேதவடிவமான திருமேனி கொண்ட கருட பகவான், மூன்று ஸ்தானங்களில் நிலைத்திருக்கும் எம்பெருமானின் வாஹனம் என்பதை ஸ்ரீ ஸ்வாமிதேசிகன் "த்ரிதாம்ன வாஹன இந்த்ர:" என்ற வாக்யமூலம் அறிவித்தார். ஸ்ரீஸ்வாமி தேசிகனின் மங்களாஸாஸனம் தேரழுந்தூர் விஷயத்தில் விசேஷ அர்த்தம் கொண்டது. மஹாவிஷ்ணுவின் மூன்று ஸ்தானங்கள், திருப்பாற்கடல், ஸூர்ய மண்டலம், முனிவர்களின் உள்ளம் என்பவை. இந்த மூன்று ஸ்தானங்களை ஸ்வீகரிப்பதால் மஹாவிஷ்ணுவிற்கு த்ரிதாம்னன் என்று ஒரு பெயர். அந்த த்ரிதாம்னனுக்கு "இந்த்ர வாஹன:" என்றபடி சிறந்த வாஹனமாக ஸேவை செய்பவன் கருடன். பக்ஷிராஜாவான கருடனுக்கு எஜமானனான ஆமருவியப்பன் முனிவர்களின் ஹ்ருதய புண்டரீகத்தை விசேஷ இருப்பிடமாகக் கொண்டவன் என ஸ்ரீஸ்வாமிதேசிகன் தெரிவித்தார். தனக்கு அருமையான முனிவர்களிடம் நடுநிலை தவறி, வேதங்கள் நிர்ணயித்த தர்மங்களிலிருந்து வழுவிய உபரிசரவசுவிற்கு முனிவர்களின் பெருமையை உணர்த்தவும், "தர்மோ விஸ்வஸ்ய ஜகத: ப்ரதிஷ்டா, வேதோऽகிலோ தர்ம மூலம்" என்ற வாக்யங்களுக்கு மதிப்புக் கொடுக்கவும், வேத ஸ்வரூபியான பக்ஷிராஜனுக்கு தேரழுந்தூரில் ஆமருவியப்பன் விசேஷ மரியாதை செய்தார்.

## 3) தேரழுந்தூர் வைதீகச்சிறப்பும், நீர்வள, நிலவளச் செல்வமும் நிறைந்தது

திருமங்கை மன்னனின் பாசுரங்களிலிருந்து, ஆமருவியப்பன் கோயில் கொண்டுள்ள திருவழுந்தூர், நான்கு வேதங்களையும் சிறப்புடன் ஓதும் முனிவர்கள் இல்லமாகக் கொண்டதால் பவித்ரமானது என தெரிந்து கொள்கிறோம். செழிப்பு மிகுந்த காவேரி ப்ரவாஹத்தால் நனைக்கப்பட்டு, நீர்வளம், நிலவளம் கொழிக்கும் திருவழுந்தூரில் வேதவித்துக்கள் ஆமருவியப்பன் திருவடிகளை வழிபடுவதை திருமங்கை மன்னன் விவரிக்கிறார். அப்பேற்ப்பட்ட வேதவித்துக்களான முனிவர்கள் ஆராதிக்கும் ஆமருவியப்பனின் திருவடிகளைத் தானும் வழிப்பட்டு ஆனந்தமடைந்ததை "அழுந்தூர் மறையோர் அடிபணியும் கரியானை அடியேன் கண்டு கொண்டு களித்தேனே" எனச் சொன்னார். மற்ற ஒரு பாசுரத்தில் நான்கு வேதங்களையும் ஓதும்

www.sadagopan.org

வேதியர்களின் வேத ரிக்குகளால் புகழப்பட்டு கருமாமலை போல் திருவழுந்தூரில் ஸேவை தரும் ஆமருவியப்பனைத் தான் ஸேவித்துக் கொண்ட விதத்தை பின் வருமாறு விவரித்தார்:

“செஞ்சொல் நான்மறையோர் தென்னழுந்தையில் மன்னி நின்ற

அஞ்சனக் குன்றந்தன்னை அடியேன் கண்டு கொண்டேனே”

தெற்கு திசையை மங்களம் செய்து கொண்டு திருவழுந்தூரில் நிற்கும் தேவாதி தேவன் பரம தயாளு. தன்னிடம் சரணாகதி செய்தவர்களுக்கு இன்னமும் கஷ்டங்கள் விலகவில்லையா? இஷ்ட காம்யங்கள் ஸித்திக்கவில்லையா? என்று கேட்டு உபசரித்து அனுக்ரஹம் செய்யும் தயாநிதி. அந்த பரம்பொருளைத் தானும் ஸேவித்துக்கொண்டு ஸர்வமங்களங்களையும் பெற்றதை திருமங்கை மன்னன் பின்வருமாறு சொன்னார்:

”……….அடியார்க்கு

ஆவாவென்றிரங்கித் தென்னழுந்தையில் மன்னி நின்ற

தேவாதி தேவனை யான் கண்டு கொண்டு திளைத்தேனே”

அவனை ஸேவித்துக்கொண்டு, ஆனந்தம் அடைந்து, அந்த ஸேவா பலத்தால் தான் பிழைத்துப் போனதை, “அணியழுந்தூர், உடையானை, அடியேன் அடைந்து உய்ந்து போனேனே” என அறிவித்தார். ஆமருவியப்பனை தென் அழுந்தையில் நிற்கும் ஸ்ரேஷ்டமான கற்பக வ்ருக்ஷம் என அறிந்து, “கரு ஆர் கற்பகம்” ஆன அவனை ஸேவித்ததால் தான் ஸர்வ பாக்யங்களையும் பெற்றது, குறைவில்லா செல்வம் அடைந்து நிறைந்ததால் பின்வருமாறு தெரிவித்தார்:

“..அணியழுந்தூர், நின்றானை அடியேன் கண்டுகொண்டு நிறைந்தேனே”.

கார்முகில் நிறம் கொண்ட நீலமேக ச்யாமளனான ஆமருவியப்பனை தெவிட்டாத அமுதமாகவும், சப்த ப்ரஹ்ம்மாம்ருதமான வேத ரிக்குகளின் உட்பொருளாகவும் அறிந்து நமஸ்கரித்துக்கொண்டு, திருமங்கை மன்னன் தான் அனுபவித்த பேரானந்தத்தை பின்வரும் பாசுரவாக்யங்கள் மூலம் நமக்கு தெரிவிக்கிறார்:

www.sadagopan.org

".....மலர்மங்கை நாயகனை

ஆரவின்னமுதைத் தென்னழுந்தையில் மன்னி நின்ற

காரார் கருமுகிலைக் கண்டு கொண்டு களித்தேனே"

தேரழுந்தூரின் வீதிகள் எல்லாவற்றிலும் ஒலிக்கும் வேத கோஷங்கள் தன்னையே போற்றுவதை அறிந்து ஏற்றுக் கொண்டு நிற்கும் ஆமருவியப்பனை, தன்னைத் தடுத்தாட் கொண்ட ஆசார்ய புருஷனாக பின்வரும் பாசுரத்தில் திருமங்கை நமஸ்கரித்துக் கொள்கிறார்:

"நிலையாள் ஆக என்னை உகந்தானை நிலமகள் தன்

முலைஆள் வித்தகனை முதுநான் மறை வீதிதோறும்

அலை ஆகும் கடல்போல் முழங்கும் தென்னழுந்தையில் மன்னி நின்ற

கலை ஆர் சொல் பொருளைக் கண்டு கொண்டு களித்தேனே"

அஹங்கார, மமகாரம் கொண்ட தன்னை "நிலை ஆள் ஆக" ஆமருவியப்பன் உகந்து ஏற்றுக் கொண்டதாக திருமங்கை இங்கு சொல்கிறார். "நிலை ஆள்" என்பது ஆமருவியப்பன் திருவடிகளில் நிலைத்து நிற்கும் தாஸனாக ஆன வைபவத்தைக் குறிப்பிடுகிறது. கடலில் அலைகள் ஸதா மோதி சப்தத்துடன் கரையில் சேருவது போல், திருவழுந்தூரின் வீதிகளில் எல்லாம் வேத கோஷமாகிற அலைகள் ஒலித்துக்கொண்டு, ஆமருவியப்பன் திருவடிகளின் மஹிமையை விளக்கிக் கொண்டு அவன் பாத கமலங்களை முடிவில் அடைவதை இந்த பாசுரத்தில் சொல்கிறார்.

ஆமருவியப்பன் வேதங்களாலும் ப்ரஹ்மம, இந்த்ர, ருத்ராதிகளாலும் அறிந்து கொள்ளமுடியாத குணசீலன் என்பதையும் பிராட்டி நித்யவாஸம் செய்யும் மார்பு உடைய அவன் திசைகள், ப்ருத்வீ, ஆகாசம், வாயு, நீர், அக்னி ஆகிய பஞ்சபூதங்கள் இவைகளை உடலாக உடைய ஸூக்ஷ்ம ஸ்வரூபி என்பதையும் பின்வரும் பாசுரங்கள் மூலம் கூறி, அவனை ஸேவித்து தான் ஆனந்தப்பட்டதை விவரித்தார்:

"பெரியானை அமரர்தலைவற்கும் பிரமனுக்கும்

www.sadagopan.org

உரியானை யுகந்தானவனுக்கும் உணர்வதனுக்கு

அரியானை அழுந்தூர் மறையோர் அடிபணியும்

கரியானை கண்டு கொண்டு களித்தேனே"

"திருவாய் மார்வன் தன்னைத் திசை மண்ணீர் எரிமுதலா

உருவாய் நின்றவனை ஒலிசேரும் மாருதத்தை

அருவாய் நின்றவனைத் தென்னழுந்தையில் மன்னி நின்ற

கருவார் கற்பகத்தைக் கண்டு கொண்டு களித்தேனே"

ஆமருவியப்பனை, "பெரியான், கரியான், உணர்வதனுக்கு அரியான், திசை மண் நீர் எரி முதலா உருவாய் நின்றவன், ஒலிசேரும் மாருதத்தை அருவாய் நின்றவன்" என திருமங்கை விவரிக்கிறார். பெரியான் என்பது அளவிடமுடியாத குணக்கடல் என்பதை குறிக்கிறது. கருத்த நிறமுடைய "கரியான்", தேவேந்த்ரன், ப்ரஹ்ம்மா, யானைத்தோலை உடையாக அணிந்த ருத்ரன் இவர்களாலும் அறியமுடியாத "உணர்தனுக்கு அரியான்" என்ற புகழ்பெற்றவன் என திருமங்கை இங்கு தெரிவிக்கிறார். அவனே அப்பு, தேஜஸ், வாயு, அந்தரிக்ஷம், ப்ருத்வீ ஆகிய பஞ்சபூதங்களுக்கும் உள் திகழும் அந்தர்யாமி என்பதையும் இங்கு விளக்கினார்.

திருவழுந்தூர் வேத ஸம்ப்ரதாயத்திற்கும், வைதீக தர்மானுஷ்டானங்களுக்கும் பேர் போனதுடன் நிற்காமல், மிகவும் சிறந்த நீர்வளம், நில வளம் நிரம்பியிருப்பதையும் தனது பாசுரங்களில் திருமங்கை நமக்கு அறிவிக்கிறார். உதாரணமாக திருநெடுந்தாண்டக பாசுரங்களில் நாயகி பாவத்தில் ஆமருவியப்பனை அணுகும் பாசுரங்களில் "அணி அழுந்தூர்" என்ற அழகிய திருவழுந்தூரின் இயற்கை அழகை "அல்லியம்பூ மலர் பொய்கைப் பழன வேலியணியழுந்தூர்" என விவரித்தார். அல்லிப்பூக்கள் மலரும் தடாகங்களும், வேலிகள் சூழ்ந்த தோப்புகளை ஆபரணமாகக் கொண்ட அழகிய திருவழுந்தூர் என திருமங்கை கொண்டாடினார்.

பெரிய திருமொழி பாசுரங்களில் திருவழுந்தூரின் சௌந்தர்யத்தை திருமங்கை பல விதமாக புகழ்கிறார். திருவழுந்தூரின் செழிப்பான வயல்களில் நெற்பயிர்களின் நடுவே

www.sadagopan.org

அழகிய பெண்களின் கண்கள், வெண்பற்கள் கொண்ட முகங்களை ஞாபகப்படுத்தும் கருநெய்தல், குவளை, தாமரை புஷ்பங்கள் மலர்ந்து சோபிப்பதை பின் வருமாறு விவரித்தார்:

“நெல்லிற்குவளை கண் காட்ட நீரிற்குமுதமும் வாய் காட்ட

அல்லிக்கமல முகங்காட்டும் கழனியழுந்தூர்”

திருவழுந்தூரின் வயல்களில் உள்ள அன்னபக்ஷி தம்பதிகள், அருகில் உள்ள பொய்கைகளில் உள்ள தாமரை புஷ்பங்களில் அமர்ந்திருக்கும் வண்டுகள் பாடும் பண்களைக் கேட்டுக் கொண்டு, அதற்கு தகுந்தவாறு நடனம் புரிவதை திருமங்கை கண்டு ஆனந்தப்பட்டு, நமக்கும் அந்த அழகிய காக்ஷியை பின் வருமாறு விவரித்தார்:

“மன்னு முதுநீர் அரவிந்தமலர்மேல் வரிவண்டிசை பாட

அன்னம் பெடையோடு உடன் ஆடும் அணிஆர் வயல் சூழ் அழுந்தூர்”

இந்த தாமரைப் பொய்கைகள், நீர்வளத்தால் என்றும் வற்றாத பழைய நீர் கொண்டிருப்பதை, “மன்னு முது நீர்’ பொய்கைகள் என விளக்கினார்.

வயல்களில் அன்ன பக்ஷிகள் நடனம் ஆடுவது சமயம் ஏற்படும் மங்கள ஒலிகள் போல, திருவழுந்தூரின் வீதிகளில், பஞ்சு போல் ம்ருதுவான அடிகளை உடைய பெண்மணிகள் நடனம் ஆடும் சமயம் ஏற்படும் அவர்களுடைய கால் சிலம்புகளின் ஒலி எங்கும் அழகுடன் நிறைந்திருந்தன என கலியன் பின் வருமாறு தெரிவித்தார்:

“பஞ்சி அன்ன மெல் அடி நற்பாவைமார்கள் ஆடகத்தின்

அஞ்சிலம்பின் ஆர்ப்ப ஓவா அணிஆர் வீதி அழுந்தூரே”

திருவழுந்தூர் வீதிகளின் அழகையும், அந்த வீதிகளில் உள்ள மாளிகைகளின் செல்வச்சிறப்பையும், திருமங்கை பல பாசுரங்களில் விவரித்திருக்கிறார். வீதிகள் “வேலைகடல் போல் நெடு வீதி” என இருந்தன என்றார். இரண்டு கரைகள் கொண்டு கடல் போல் திருவழுந்தூரின் வீதிகள் நீண்டு இருந்தன என இங்கு சொன்னார். அகண்ட வீதிகளின் இருபுறங்களிலும் “விண்டோய் சுதை வெண்மணி” மாடங்கள்,

www.sadagopan.org

ஆகாயம் வரை உயர்ந்தும், சுண்ணாம்பு சுதையின் வெண்நிறம் ப்ரதிபலித்துக் கொண்டும் நிற்பதைக் காண்கிறார். அந்த மாளிகைகளின் உள் இருந்து, கரும்பு சக்கைகளை எரிப்பதால் உண்டான புகை எழும்பி, வெப்பம் கொண்ட சூர்யனின் கதிர்களை மறைப்பதைக் காண்கிறார். கரும்பு சக்கைகள், கருப்பங்கழிகளிலிருந்து சக்கரை செய்வதற்கு ஏற்படுத்தின ஆலைகளிலிருந்து வந்ததாக ஊஹிக்கிறோம். வெண் மாடங்களின் புகைக்கூண்டுகளிலிருந்து கருப்பு நிற புகை வெளிக்கிளம்பி, சூர்யனின் ஒளியையே மறைப்பது போல் தோன்றுவதையும், அகலமான வீதிகளின் அழகையும் பின்வருமாறு விவரித்தார்:

"வேலைகடல் போல் நெடுவீதி விண்டோய் சுதை வெண்மணி மாடத்து

ஆலைபுகையால் அழற்கதிரை மறைக்கும் வீதியழுந்தூரே"

அந்த வீதிகளில், மழைக்கால சமயம் காணப்படும் இரண்டு சம்பவங்களை பின்வருமாறு விவரித்தார்:

"நீடுமாடத் தனிச்சூலம் போழ்கக் கொண்டால் துளிதூவ

ஆடல் அரவத்தார்ப்பு ஓவா அணியார் வீதியழுந்தூரே"

"துகில் இன் கொடியும் தேர்துகளும் துன்னி மாதர்கூந்தல்வாய்

அகிலின் புகையால் முகில் ஏய்க்கும் அணியார் வீதி அழுந்தூரே"

தேரழுந்தூர் திருவீதிகளின் வண்ணமாடங்களின் உச்சியில், மின்னலைத் தடுக்கின்ற சூலங்கள் நாட்டப்பட்டிருப்பதை "நீடு மாடம் தனி சூலம் போழ்க" எனச்சொன்னார். மேகமளவு உயர்ந்திருக்கும் சூலங்கள், மேகத்தை அடிப்பாகத்தில் பிளப்பது போல் கலியனுக்கு தோன்றியது. சூலங்களால் பிளக்கப்பட்ட கார்முகில் மேகங்கள் மழையைக் கொட்ட ஆரம்பிக்கின்றன. மழை பொழிவதால் ஏற்படும் சப்தம், பெண்மணிகள் வீதிகளில் நடனம் செய்யும்போது ஏற்பட்ட சப்தத்துடன் போட்டி போட்டுக்கொண்டு, திருவழுந்தூரின் வீதிகளின் அழகை அதிகப்படுத்தின என "போழ்க கொண்டல் துளி தூவ ஆடல் அரவத்து ஆர்ப்பு ஓவா அணி ஆர் வீதி அழுந்தூர்" என்ற பாசுரவாக்யங்கள் மூலம் சொன்னார். வர்ஷா கால ஆரம்பத்தில் மழையை எதிர்பார்க்கும் ஜனங்களின் ஆனந்த நடனம் நிறைந்த வீதிகளில் முதல் மழைத்துளிகள்

www.sadagopan.org

வீழ்வதை இந்த பாசுரப்பகுதியில் கூறினார்.

மழை பொழிவதற்கு முன், மாடங்களில் உள்ள துணிக்கொடிகள் புயல் காற்றில் பலத்த சப்தத்துடன் ஆடுவதையும், மழை வருவதற்கு முன் வீடு சேர வேணும் என்று ஜனங்கள், அவசரமாக தங்கள் தேர்களை செலுத்திக் கொண்டு புழுதிகளை வீதிகளில் கிளப்புவதையும், "துகில் இன் கொடியும் தேர்துகள்களும் துன்னி .... அணி ஆர் வீதி அழுந்தூரே" என நமக்கு விபரமாகச் சொன்னார். மாடங்களின் உள் அகில் கட்டையின் சாம்ப்ராணிப் புகையால், பெண்மணிகளின் கூந்தல்கள் சூழப்பட்டு மழைக்காலத்து மேகங்கள் போல் தோன்றியதை "மாதர் கூந்தல் வாய், அகிலின் புகையால் முகில் ஏய்க்கும் அணியார் வீதி அழுந்தூரே" எனச் சொன்னார்.

திருவழுந்தூரில் வேதியர்கள் இடைவிடாது செய்யும் யாகங்களாக மாதம் மும்மாரி பெய்து செழித்து இருப்பதை மற்றும் ஓர் பாசுரப்பகுதியில் பின்வருமாறு தெரிவித்தார்:

"முந்தி வானம் மழை பொழிய மூவா உருவின் மறையாளர்

அந்தி மூன்றும் அனம் ஓம்பும் அணி ஆர் வீதி அழுந்தூரே"

திருவழுந்தூரில் கோயில் கொண்டவன் பசுக்களை அன்புடன் மேய்த்த ஆமருவியப்பன் என்ற கோபாலன். அவன் பிறந்த சமயம் மழைக்காலம் அதனால் தான் என்னவோ, மழைக்கால சம்பவங்களை திருமங்கை திருஅழுந்தூர் பாசுரங்களில் விசேஷமாக விவரிக்கிறார். மேற்காணும் பாசுரப்பகுதியில், கிழத்தனம் காணாத சரீரங்கள் உடைய அந்தணர்கள், திருஅழுந்தூர் வீதிகளில் உள்ள மாளிகைகளில் மூன்று சந்திகளிலும், அக்னிஹோத்ரம் முதலான அனுஷ்டானங்களை செய்து தர்மத்தை கடைப்பிடிப்பதை "மூவா உருவின் மறையாளர் அந்தி மூன்றும் அனல் ஓம்பும் அணி ஆர் வீதி அழுந்தூர்." என அறிவித்தார். அந்தணர்கள் செய்யும் பூஜைகளாலே த்ருப்தி அடைந்த இந்த்ரன் முதலான தேவர்கள், திருவழுந்தூர் ஜனங்களின் பிரார்த்தனைகளுக்கு முன்னமேயே மழை பொழிய வைக்கிறார்கள் என இங்கு கலியன் சொல்கிறார்.

திருவழுந்தூர் வீதிகளின் அழகு, அங்கு சஞ்சரிக்கும் தேர்களின் அழகு, மாளிகையின் உள் வசிக்கும் பெண்களின் அழகு இவைகளைப் பாடிய திருமங்கை, ஊருக்கு வெளியே உள்ள கழனிகள், தடாகங்களில் நடைபெறும் விஷயங்களைப் பற்றியும் அடுத்த பாசுரங்களில் சொல்லி திருஅழுந்தூரின் விசேஷ ஸம்ருத்தியை

www.sadagopan.org

விவரிக்கிறார். திருவழுந்தூரின் செழிப்புள்ள வயல்களின் நடுவே நடக்கும் இரண்டு விஷயங்களை பின் வருமாறு சொல்கிறார்:

"புள்ளுபிள்ளைக்கு இரைதேடிப்போன காதற்பெடையோடும்

அள்ளல் செறுவில் கயல் நாடும் அணி ஆர் வயல் சூழ் அழுந்தூரே"

ஒரு ஆண் பக்ஷி தன் சிறு குழந்தைகளுக்காக தன் காதலியுடன் திருவழுந்தூரின் செழிப்பு உள்ள வயல்காடுகளில் மீனைத்தேடி செல்வதை இங்கு ஆழ்வார் சித்ரமாக வார்த்தைகள் மூலம் வரைகிறார். ஆணும், பெண்ணும் தங்கள் குட்டிகளின் க்ஷேமத்திற்காக கயல்களைத் தேடும் வயல்கள் கொண்ட அழகிய ஊர் திருவழுந்தூர் எனச் சொன்னார்.



தேரழுந்தூர் தர்சந புஷ்கரிணி

அதே வயல்களில் கொக்குகள் சேரில் அளைந்து தங்கள் அலகுகள் மூலம் சிறிய மீன்களையும், பெரிய மீன்களையும் துரத்தி ஓடுவதையும் திருமங்கை வர்ணிக்கிறார்.

www.sadagopan.org

முதலில், பெரிய மீன்கள் தங்கள் வாய்க்கதுப்புகளில் அடக்க முடியுமோ என சந்தேஹம் ஏற்பட்டு அவைகளை கொக்குகள் விட்டு விடுகின்றனவாம். சிறிய மீன்களை முழுங்கி தங்கள் கதுப்புகளின் அளவு சம்பந்தப்பட்ட சந்தேஹம் விலகிய பின், பெரிய மீன்களைத் தேடி கொக்குகளும் குருகுகளும் போவதை ஆழ்வார் காண்கிறார். சிறிய மீன்களும், பெரிய மீன்களும் நிலச்செழிப்பையும், அபரிமிதமான ஆஹார செல்வத்தையும் குறிக்கின்றன. இத்தகைய செழிப்புள்ள வயல்கள் நிறைந்த திருஅழுந்தூர் என் ஆமருவியப்பன் இருக்குமிடம் என பின் வருமாறு தெரிவித்தார்:

“நீரில் பணைத்த நெடுவாளைக்கு அஞ்சிப் போன குருகினங்கள்

ஆரல் கவுளோடு அருகு அணையும் அணியார் வயல் சூழ் அழுந்தூரே”

செழிப்புள்ள வயல் காடுகளின் நடுவில், நறுமணப்பூக்கள் கொண்ட மாதவி மரங்களை கலியன் காண்கிறார். அந்தப் பூக்களின் தேனை அருந்தும் வண்டுகள், தேரழுந்தூரின் அழகிய பெண்களின் கூந்தல் வாசனையால் ஆகர்ஷிக்கப்பட்டு மாதவிப்பூத்துகள்களை அவர்கள் கூந்தலில் சேர்த்து விடுகின்றன என பின் வருமாறு விவரித்தார்:

”கொம்பிலார்ந்த மாதவி மேல் கோதி மேய்ந்த வண்டினங்கள்

அம்பு அராவும் கண் மடவார் ஐம்பால் அணையும் அழுந்தூரே”

மாதவி என்பது குருக்கத்தி மரம். அது திருஅழுந்தூர் பெண்களின் கேசபாரங்கள் போல் அடர்ந்த கிளைகளுடன் இருக்கும். அந்த கிளைகளில் உள்ள புஷ்பங்களில் உரசும்போது, தேனீக்கள் மகரந்த பொடிகளை தன் தும்பிக்கைகளில் சேர்த்துக் கொள்கின்றன. அது சமயம் அம்புகள் போல் கூர்மையான கண்கள் கொண்ட தேரழுந்தூர் பெண்களின் கூந்தல் மணம் வண்டுகளுக்கு குழப்பத்தை ஏற்படுத்துகிறது. வண்டுகள், அதனால் பெண்கள் இருக்கும் இடம் அடைந்து அவர்கள் கூந்தலைச் சுற்றி ரீங்காரம் செய்யும் சமயம் மாதவி புஷ்பத்தின் மகரந்தத்துகள்களை அவர்களின் கூந்தலில் வர்ஷிக்கின்றன. ஐந்து குணங்களுடைய திருஅழுந்தூரின் அழகிய பெண்களின் கூந்தல் அதனால் மேலும் நறுமணம் சேர்த்துக் கொண்டது என ஆழ்வார் சொல்கிறார். ஸாமுத்ரிகா லக்ஷணப்படி உயரிய அழகு உடைய பெண்களின் கூந்தல், சுருட்டை, அடர்த்தி, ம்ருதுபாவம், நறுமணம், மென்மை ஆகிய ஐந்து குணங்களும் கொண்டிருக்கும்.

www.sadagopan.org

மாதவிப்பூ வாசனையும் அத்துடன் சேர்ந்து கொண்டது. அப்பேற்ப்பட்ட செழிப்பு உள்ள வயல்களும், அழகிய பெண்களும், படிப்பில் உயர்ந்த வேதியர்களும் மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் கொண்ட திருவழுந்தூரில் ஆமருவியப்பன் கோயில் கொண்டுள்ளான் என திருமங்கை மன்னன் தன் பாசுரங்களில் சொன்னார்.

வேதங்கள் போற்றும் பரம்பொருள் திருவழுந்தூரில் கோயில் கொண்டிருப்பதை நமக்கு அறிவித்து, அப்பேற்ப்பட்ட புனிதனை நீங்கள் ஸேவித்து அருள் பெறுங்கள் என திருவழுந்தூர் பாசுரமொன்றில் பின் வருமாறு சொன்னார்:

“செங்கமலத் திருமகளும் புவியும் செம்பொன் திருவடியினைணை வருட முனிவரேத்த

வங்கமலி தடங்கலுள்ளனந்தனென்னும் வரியரவினணைத் துயின்ற மாயோன் காண்மின்,

எங்குமலி நிறை புகழ்நால் வேதமைந்து வேள்விகளும் கேள்விகளும் இயன்ற தன்மை

அங்கமலத்தயன்னையார் பயிலுஞ்செல்வத்து அணியழுந்தூர் நின்றுகந்தவமரர்கோவே”

இந்த பாசுரத்தில், திருமங்கை ஆமருவியப்பனை “அணியழுந்தூர் நின்று உகந்த அமரர்” கோவாக அறிந்து கொண்டு, அந்த ”மாயோனைக் காண்மின்”, நீங்களும் கண்டு சேவித்துக் கொள்ளுங்கள் எனப் பெருமிதத்துடன் கூறுகிறார். அவனே “வரி அரவின் அணைதுயின்ற மாயோன்” என்றார். வைஷ்ணவ சின்னங்களைத் தன் படத்தில் வரிகள் போல் அணிந்து கொண்டிருக்கும் ஆதிசேஷன் மேல் யோகநித்ரை செய்யும் மாயோனே திருவழுந்தூரில் அர்ச்சாவதாரம் எடுத்து நிற்பவன் என்று கலியன் சொன்னார்.

அவன் ஆதிசேஷன் மேல் சயனம் செய்து கொண்டிருக்கும் சமயம், பெரிய பிராட்டியும், பூமி தேவியும் ஆமருவியப்பனின் பாதத்தாமரைகளை அன்புடன் வருடுவதை,

“செங்கமலத்திருமகளும் புவியும் செம்பொன் திருவடியின் இணை வருட முனிவர் ஏத்த, வங்கம்மலிதடங்கடலுள் அனந்தன்” என்னும் வரி அரவின் அணை துயின்ற மாயோன்” என நம் மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்தினார்.

க்ஷீராப்திநாதனான ஆமருவியப்பன், சதுர்முக ப்ரஹ்ம்மாவிற்கு சமமான

www.sadagopan.org

வேதாத்யனம், யாகம் முதலிய சடங்குகள் செய்வதில் உள்ள திறல், பலவித்தைகளில் தேர்ச்சி இவைகள் கொண்ட அந்தணர்கள் வாழும் திருவழுந்தூரின் நாயகனாக விளங்குவதை இந்த பாசுரத்தில் பின்வருமாறு விளக்கினார்:

"எங்கும் மலிநிறை புகழ் நால்வேதம் ஐந்து வேள்விகளும் கேள்விகளும்

இயன்ற தன்மை, அம் கமலத்து அயன் அனையார் பயிலும்

செல்வத்து அணி அழுந்தூர் நின்று உகந்த அமரர் கோவே"

எல்லா இடங்களிலும் பரவி, மிகுந்த கீர்த்தி உடைய நான்கு வேதங்கள், அவைகள் அறிவிக்கும் ஐந்து யக்ஞ்யங்கள், ந்யாயம், மீமாம்ஸை போன்ற வித்தைகள் இவைகளில் பாண்டித்யம் பெற்று, நான்முகனுடனும் போட்டியிடும் வேதியர் கூட்டங்கள் நிறைந்த திருஅழுந்தூரின் நாயகன் ஆமருவியப்பனே எனக் கலியன் கூறினார்.

**4) திருவுக்கும் திருவாகிய திருஅழுந்தூர் செல்வனைத் திருமங்கை கொண்டாடும் விதம்**

திருஅழுந்தூரின் நீர்வளம், நிலவளம், வேதமஹிமை பற்றி பலவிதமாகப் போற்றிய திருமங்கை பத்து பாசுரங்களில் அவனை நாயகனாகக் கொண்டாடி, அவனுடைய அருள்பிச்சை கேட்கிறார். அவன் அனுக்ரஹம் பெற்று அவனுடன் கூடிக் கலவி ஆனந்தமடைந்ததையும் விவரிக்கிறார். முதலில் திருவழுந்தூரின் மேற்கு திசையில் கோயில் கொண்டிருக்கும் ஆமருவியப்பனிடம் திருமங்கை சரணாகதி செய்த பாசுரங்கள் பற்றி எழுதுகிறேன். இவை பெரிய திருமொழியின் ஏழாம் பத்தில் உள்ளன.

பஞ்சேந்த்ரியங்களின் கொடுமை தாங்காது, ஆமருவியப்பனைத் தான் சரண் என அடைந்ததை பின் வரும் பாசுரம் மூலம் தெரிவித்தார்:

"திருவுக்குந்திருவாகிய செல்வா! தெய்வத்துக்கரசே செய்ய கண்ணா!

உருவச்செஞ்சுடராழி வல்லானே உலகுண்டவொருவா திருமார்பா!

ஒருவற்கு ஆற்றி உய்யும் வகை என்றால் உடன் நின்று ஐவர் என்னுள் புகுந்து ஒழியாது,

அருவித் தின்றிட அஞ்சி நின்னடைந்தேன் அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே"

www.sadagopan.org



தேரழுந்தூர் ஸ்ரீ செங்கமலவல்லி தாயார்

“ஸர்வாகார ஸ்த்திர ஸமுதயாம் ஸம்பதம்” என்ற எல்லா விதங்களிலும் அழிவில்லாத செல்வத்தை அளிக்கும் மஹாலக்ஷ்மிக்கும் செல்வமானவன் ஆமருவியப்பன் என்பதை “திருவுக்குந்திருவாகிய செல்வா” என்ற வாக்யங்கள் மூலம் திருமங்கை அறிவிக்கிறார். ஸ்ரீதேவியின் நிதியான ஆமருவியப்பன் நித்யஸூரிகளின் நாதனாகத் திகழ்வதை “தெய்வத்துக்கரசே” எனக் கலியன் நமஸ்கரித்துக் கொள்கிறார்.

“ச்ரேயோ மூர்த்திம்” என்று வணங்கப்படும் ஸ்ரீதேவி, மங்களப் பொருள்களுக்கு மங்களத்தன்மை அளித்துக் கொண்டு, “வக்ஷ: பீடம் மது விஜயிநோ பூஷயந்தீம் ஸ்வகாந்த்யா” என்றபடி மது என்ற ராக்ஷஸனை வதம் செய்து வெற்றி பெற்ற பகவானுடைய வக்ஷஸ்தலத்தை இருப்பிடமாகக் கொண்டு, தன் தேஜஸ்ஸால் அவனுடைய திருமார்பை அழகுறச் செய்வதைக் கண்டு ஆமருவியப்பனை “திருமார்பா” என அன்புடன் திருமங்கை அழைத்து ஆனந்தப் படுகிறார். செந்தாமரைக் கண்ணனான ஆமருவியப்பன் கையில் அக்னி ஜ்வாலைகளைக் கக்கிக்கொண்டு சுதர்ஸனாழ்வான் வீற்றிருப்பதை அடுத்தபடியாக திருமங்கை ஸேவித்துக் கொண்டு “செய்ய கண்ணா, உருவம் செம்சுடர் ஆழிவல்லானே” என மங்களாஸாஸனம் செய்தார்.

திருஆழிஆழ்வானின் செஞ்சுடர், ஆமருவியப்பனின் கண்ணில் ப்ரதிபலித்து, செந்தாமரைக் கண்கள் மேலும் சிவப்பு ஒளியுடன் ஜ்வலிப்பதை “செய்ய கண்ணா” எனக் கூறிக் கொண்டாடினார்.

ஆமருவியப்பனை, உலகங்கள் எல்லாம் உண்டு ஒரு ஆலிலைமேல் ப்ரளயகாலத்தில் கண்ணுறாக் கண்டு, “உலகுண்ட ஒருவா” என அழைத்து தனக்கு ஏற்ப்பட்ட சிறுமையை அவனிடம் எடுத்துச் சொன்னார். அழுந்தூர் மேல்திசை நின்ற அம்மானே, நான் படும் அவஸ்தையைக் கேள்! ஐம்புலன்கள் என்ற மல்லர்கள் என்னை வதைத்து, துண்டம் துண்டமாக்கி போஜனம் செய்கிறார்கள். ஒரு மல்லரின் உபத்ரவமே தாங்கமுடியாது இருக்கும்போது, ஐந்து மல்லர்களின் ஹிம்சைகளை என்னால் எப்படி பொறுக்க முடியும்? அவர்களுடைய கொடுமைகள் பொறுக்க முடியாது உன் திருவடிகளில் சரணமடைந்தவனாக இருக்கிறேன். உலகங்களை எல்லாம் வயிற்றினுள் அடக்கி ரக்ஷித்த ஆமருவியப்பா, நீதான் ஐம்புலன்களின் உபாதையால் அல்லல்படும் என்னை காத்தருள வேணும் என்று பின்வருமாறு வேண்டிக் கொண்டார்:

“ஒருவற்கு ஆற்றி உய்யும் வகை என்றால் உடன் நின்று ஐவர் என்னுள் புகுந்து ஒழியாது

www.sadagopan.org

அருவி தின்றிட அஞ்சி நின்னடைந்தேன், அழுந்தூர் மேல்திசை நின்ற அம்மானே”

அடுத்த பாசுரத்தில், “நீல குந்தல மத்யஸ்த்தாம் மாணிக்ய மகுடோஜ்ஜ்வலாம், சுக்லமால்யாம்பரதராம் தப்த ஹாடகவர்ணிநீம்” என்ற ஸ்ரீதேவியுடன் ஆமருவியப்பன் தன் மனக்கோயிலில் குடிகொண்டு, ஐம்புலன்களின் உபாதைகளை அழித்ததை அழகாக திருமங்கை விவரித்தார். ஆமருவியப்பனுடன் கூட எழுந்தருளிய லோக மாதாவை தோள்வளை குலுங்க, பந்துடன் விளையாடும் பொன் பதுமையாக “பந்தார் மெல்விரல் வளைதோளி பாவை பூமகள்” என்ற வாக்யங்கள் மூலம் நமஸ்கரித்துக் கொண்டார். பாவைப் பூமகளுடன் தாமரையாள் கேள்வனாக வந்து, தன் மனதாகிற கோயிலில் நிலைத்து நின்றதை “பாவை பூமகள் தன்னோடுமுடனே வந்தாய், என் மனத்தே மன்னி நின்றாய்”, என விவரித்தார். உள்ளக் கோயிலில் நிற்கும் திவ்யதம்பதிகளைக் கண்டு, எல்லையிலா ஆனந்தம் கொண்டு பல திவ்ய நாமங்களால் திருமங்கை ஸ்தோத்ரம் செய்தார். “மால்வண்ணா, மழை போல் ஒளி வண்ணா, சந்தோகா, பௌழியா, தைத்திரியா, சாமவேதியனே, நெடுமாலே, அந்தோ, நின் அடி அன்றி மற்று அறியேன்! அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே” என ஆதுரத்துடன் அறிவித்தார். கார்முகில் போல் கருத்த அவன் திருமேனியையும், அந்த கார்முகிலின் குளிர்ந்த கருணை ஸ்வரூபத்தையும் மனத்தில் வைத்து “மால் வண்ணா, மழை போல் ஒளி வண்ணா” என அழைத்தார்.

“यो वै भूमा तत् सुखं नाल्पे सुखमास्ति भूमैव सुखं भूमा त्वेव विजिज्ञासितव्य इति भूमानां भगवो विजिज्ञास इति” (யோ வை பூமா தத் சுகம் நால்பே சுகமஸ்தி பூமைவ த்வேவ விஜிஞ்ஞாஸிதவ்ய இதி பூமானாம் பகவோ விஜிஞ்ஞாஸ இதி) என்ற சாந்தோக்ய உபநிஷத் வாக்யங்களின் அர்த்தத்தை அறிந்தவர்களுக்கு அனுக்ரஹம் செய்யும் ஆமருவியப்பா என திருமங்கை “சந்தோகா” என்ற திவ்ய நாம உச்சரணம் மூலம் நமஸ்கரித்துக் கொள்கிறார். முன் பாசுரங்களில் திருவழுந்தூரின் வேதவித்துக்களைப் பற்றி திருமங்கை சொன்னார். அவர்கள் எந்தவிதமான படிப்பு உள்ளவர்கள் என்பதை இங்கு சொல்ல ஆரம்பிக்கிறார். உபநிஷத்துகளில் உயர்ந்ததான சாந்தோக்ய உபநிஷத் சொல்லும் “The Brahman (Infinite) is bliss. There cannot be any bliss in something other than the Infinite Brahman. This Infinite Brahman should be the goal of our serious learning”. ப்ரஹ்ம்மனைத்தவிர பரமானந்தம் அளிக்கும் விஷயம் ஏதும் கிடையாது. மற்ற பரிபூர்ணம் இல்லாத பின்ன (भिन्न) வஸ்துக்கள் நிரந்தரமான

www.sadagopan.org

ஆனந்தத்தை அளிக்காது அந்த ப்ரஹ்ம்மத்தை அறிவதான முயற்சியால் ஈடுபடுவதைத் தவிர விசேஷமான படிப்பு ஏதும் இந்த புவியில் இல்லை என்று சாந்தோக்ய உபநிஷத் சொல்லுகிறது. இந்த உபநிஷத்தின் உள் அர்த்தத்தை கடைபிடிக்க வேதியர்களால் ஆராதிக்கப்படும் ஆமருவியப்பனை "சந்தோகா" என திருமங்கை அன்புடன் அழைக்கிறார்.

அடுத்தபடியாக, "सं बाहुभ्यां धमति सं पतत्रैर्घावा भूमी जनयन् देव एकः........पतिर्बभूथासमो जनानामेको विश्वस्य भुवनस्य राजा.....य एक इद् विदयते वसु मर्ताय दाशुषे" என்ற ருக்வேத ரிக்குகள் மூலம் வழிபடும் வேதியர்களுக்கு அருள்புரியும் ஆமருவியப்பனை "பௌழியா" என திருமங்கை அழைத்து ஆனந்தமடைந்தார். மேற்காணும் ரிக்வேதப்பகுதிகள் அண்ட சராசரங்களை (cosmos) தன்னுடைய இரு இறக்கைகளாலே ரக்ஷித்து, ஊக்குவித்து, அவன் போஷிப்பதையும், தனது நிகர் இல்லா வீரத்தாலும், கருணையாலும் ஸகல லோகங்களுக்கும் யஜமானனாக இருப்பதையும் எல்லாருக்கும் தன் உதார குண விசேஷத்தால் எல்லையிலா மங்களச் செல்வங்கள் அளிப்பதையும் கொண்டாடுகின்றன. இந்த ரிக்குகள், மற்ற இது சம்பந்தமான கருத்துக்களை வெளியிடும் ருக்வேத ரிக்குகள் மூலம் ஆமருவியப்பனை தேரழுந்தூர் அந்தணர்கள் மூன்று சந்திகளிலும், யாக, யக்ஞங்கள் மூலம் கொண்டாடுவதை திருமங்கை கண்டு, ரிக்வேதிகளுக்கு அனுக்ரஹம் செய்யும் "பௌழியா" என வணங்குகிறார்.

அடுத்தபடியாக "तदेवाग्निस्तदादित्यस्तद्वायुस्तदु चन्द्रमा, तदेव शुक्रं तद् ब्रह्म ता आपः स प्रजापतिः" ("ததேவாக்னிஸ்ததாதித்யஸ்தத்வாயுஸ்தது சந்த்ரமா, ததேவ சுக்ரம் தத் ப்ரஹ்ம்ம தா ஆப: ஸ ப்ரஜாபதி:") என யஜுர்வேதப்பகுதிகள் மூலம் ஆமருவியப்பனை "தைத்திரியா" என அழைத்தார். சாந்தோக உபநிஷத், ரிக்வேதம், யஜுர்வேதம் இவைகள் மூலம் தன்னுடைய வேதஸ்வரூபத்தைக் கொண்டாடும் பெரியோர்களுக்கு தவறாது அனுக்ரஹம் செய்யும் சந்தோகனாம், பௌழியனாம், தைத்திரியனாம் ஆமருவியப்பனை நாதப்ரஹ்ம்ம ஸ்வரூபமாக அடுத்தபடியாக திருமங்கை கொண்டாடினார்.

"अग्न आ याहि वीतये गृणानो हव्यदातये" (அக்ன ஆ யாஹி வீதயே க்ருணானோ ஹவ்யதாதயே)...என்று ஆரம்பித்து "ஸ்வஸ்தி ந இந்த்ரோ வ்ருத்தஸ்ரவா: ஸ்வஸ்தி ந: பூஷா விஸ்வ வேதா: ஸ்வஸ்தி நஸ்தார்க்ஷ்யோ அரிஷ்டநேமி: ஸ்வஸ்தி நோ ப்ருஹஸ்பதிர் ததாது (स्वस्ति न इन्द्रो वृद्धश्रवाः स्वस्ति नः पूषा विश्ववेदाः। स्वस्ति नस्तार्क्ष्यो अरिष्टनेमिः स्वस्ति नो बृहस्पतिर्दधातु॥ स्वस्ति नो बृहस्पतिर्दधातु) என்று முடியும் சாம வேதத்தின் 1875

www.sadagopan.org

ஸாமங்கள் மூலம் வழிபடும் வேதியர்களுக்கு அருள் செய்யும் ஆமருவியப்பனை "சாமவேதியனே" எனத் திருமங்கை மங்களாஸாசனம் செய்தார். வேதங்களால் போற்றப்படும் திருவழுந்தூர் தெய்வத்தினிடம் "நெடுமாலே! அந்தோ! நின்னடி அன்றி மற்று அறியேன் அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே" எனச் சொல்லி திருமங்கை சரணாகதி செய்தார், கர்மேந்த்ரியங்களுக்கு அடிமைப்படாது இருக்க எனக்கு அருள் புரிந்து, ஞானேந்த்ரியங்கள் மூலம் திருவுக்கும் திருவாகிய செல்வனான உன்னை உன் பிராட்டியுடன் உள்ளக்கோயிலில் அமர்ந்தவனாகக் காண அருள் செய்ய வேணும். உன் திருவடிகள் தவிர வேறு ஒன்றையும் சததமாக நான் நம்பவில்லை என்று இந்த பாசுரத்தில் கலியன் கூறினார்.

அடுத்த பாசுரத்தில் ஆன்மீக ஞானம் வளர்வதற்கு தடை செய்யும் சிற்றின்ப சுகங்கள் நிறைந்த உலகத்தில் உழலுமாறு என்னைப் படைத்தாய். இந்த உலகில் பிறந்தபின் ஐம்புலன்களின் உபத்ரவங்களுக்கு உட்பட்டு, சிற்றின்பங்களே பேரின்பங்கள் என்று எண்ணும் குழப்பத்தை அளித்தாய். அந்த வ்யாமோஹம் பொறுக்காது உன் திருவடிகளே சரணம் என்று நம்பி உன்னை அடைந்துள்ளேன். ஒரு கையில் சக்கரமும், மறு கையில் வெண் சங்கும் ஏந்தும் ஆமருவியப்பா, நீதான் என்னைக் காத்தருள வேண்டும் என திருமங்கை ப்ரார்த்தித்துக் கொண்டார். அந்த கருத்துகள் கொண்ட பாசுரம் பின்வருமாறு:

"நெய் ஆர் அழியும் சங்கமும் ஏந்தும் நீண்ட தோள் உடையாய் அடியேனைச்

செய்யாத உலகத்திடைச் செய்தாய் சிறுமைக்கும் பெருமைக்கும் உள்புகுந்து

பொய்யால் ஐவர் என் மெய்குடி ஏறிப்போற்றி வாழ்வதற்கு அஞ்சி நின்னடைந்தேன்,

ஐயா! நின்னடி அன்றி மற்று அறியேன் அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே"

தேரழுந்தூரில் சரணாகத வத்ஸலனாக நிற்கும் அம்மானை "நெய்யாராழியும் சங்கமுமேந்தும் நீண்டதோளுடையானாய்" திருமங்கை ஸேவித்துக் கொள்கிறார். "நெய் ஆர் ஆழி" அணியும் பெருமானின் ஒருகையில் ஸுதர்ஸனம் ஜ்வலிக்கிறது. இங்கு கூர்மையான நுனிகள் கொண்ட ஸுதர்ஸன ஆழ்வானை மணம்மிக்கு புது நெய் மூலம் ஸுதர்ஸன ஹோம முறையால் ஆராதிக்கப்படும் ஆமருவியப்பனின் ஒரு திவ்ய ஆயுதமாக நமஸ்கரித்துக் கொள்கிறார். இரண்டாவது கையில் பாஞ்சஜன்யம் என்ற வெள்ளை விரிசங்கை இரண்டாவது ஆயுதமாகக் கண்டு வணங்கிக் கொண்டார். உன் வெண்சங்கம் ஊதி, நீ என் ரக்ஷணத்திற்கு வருவதை அறிவித்து, உன் கூர்மை மிக்க

www.sadagopan.org

சக்ராயுதத்தின் மூலம் என் கர்ம பந்தங்களை அறுத்து, உன் திருவடி நிழலின் சௌக்யத்தை அளி என திருமங்கை இங்கு ஆமருவியப்பனிடம் வேண்டிக்கொண்டார்.

ஐம்புலன்களின் ஆதிக்யத்திற்கு அடிமைப்பட்டு, தான் படும் சிறுமைகளை அகற்றுமாறு, மேலும் இரு பாசுரங்களில் திருமங்கை ஆமருவியப்பனிடம் ப்ரார்த்திக்கிறார். முதல் பாசுரம் பின் வருமாறு:

“நெடியானே கடி ஆர் கலி நம்பி நின்னையே நினைந்து இங்கு இருப்பேனைக்

கடியார் காளையர் ஐவர் புகுந்து காவல் செய்த அக்காவலைப்பிழைத்து

குடிபோந்து உன்னடிக் கீழ்வந்து புகுந்தேன் கூறை சோறு இவை தந்து எனக்கருளி

அடியேனைப் பணி ஆண்டு கொள் எந்தாய் அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே”

ஸர்வஸ்வாமியே! லோக ரக்ஷணத்திற்காக திருப்பாற்கடலில் பள்ளி கொண்ட பெரியோனே! விஷயாந்தரங்களை ஒதுக்கி உன் அருகில் நின்று தாஸ்யம் செய்வதையே கருத்தாகக் கொண்ட என்னை, தங்கள் வலிவால் கொழுப்பு கொண்ட ஐம்புலன்கள் என்ற காளைகள் வழிமறிக்கின்றன. எப்படி என் கருத்துக்கள் நிறைவேறாது தடுப்போம் என ஐம்புலன்களும் எனது சரீரமாகிய சிறையில் அடைத்து காவல் புரிகின்றன. அந்த சிறையிலிருந்து தப்பி, நீ கோயில் கொண்டிருக்கும் திருவழுந்தூர் மேல் திசையை லக்ஷ்யமாகக் கொண்டு, உன் திருவடிகள் சமீபம் வந்துவிட்டேன். இனி, உன் சரணகமலங்களின் நிழலை அளித்து, என்னை அடிமையாக ஏற்றுக் கொண்டு காப்பாற்றுவது உன் பொறுப்பு என இந்த பாசுரத்தில் திருமங்கை வேண்டிக் கொண்டார்.

இரண்டாவது பாசுரத்தில், தன்னுள் புகுந்து வாட்டி வதைக்கும் பஞ்சேந்த்ரியங்களின் கொடுமைகளை தன்னால் இனி பொறுக்க முடியவில்லை. தேரழுந்தூரில் கோயில் கொண்ட புண்ணியனே! வேதஸ்வரூபியாய் அருகில் நிற்கும் கருடனைக் கொடியில் கொண்டவனே! த்ரிவிக்ரமனாய் ஓங்கி உலகளந்த நெடுமாலே! அக்னி ஜ்வாலைகளை மூச்சுடன் வெளிவிடும் “தீவாய் நாகம்” ஆகிய ஆதிசேஷன் மேல் திருப்பாற்கடலில் யோக நித்ரையில் ஆழ்ந்தவனே! ஸ்ரீதரா! நீ ஐம்புலன்களுக்கு என்னை ஆடையாகவும், யோக்யமான ஆஹாரமாகவும் இருக்குமாறு செய்துவிட்டாய். அந்த ஐம்புலன்களின் ஆதிக்யத்தில் இருந்து விடுதலை அடைய உன்னிடம் சரண் புகுந்தேன். உன்னையே நம்பியுள்ளேன். இதற்கு மேல் என்னதான் செய்ய வேண்டும் என்பது தெரியவில்லை.

www.sadagopan.org

"இனிச் செய்வதொன்றறியேன், ஆவாவென்றடியேற்குகிறை இரங்காய்" என ப்ரார்த்தித்து, உனது தாஸனான என்னிடம் மனதிரங்கி, காத்து அருள் எனக் கேட்டுக் கொண்டார். இந்த கருத்துகள் கொண்ட பாசுரம் பின் வருமாறு:

"கோவாயைவர் என்மெய் குடியேறிக் கூறை சோறி வைதாவென்று குமைத்துப்

போகார் நானவரைப் பொறுக்கிலேன் புனிதா! புட்கொடியாய்! நெடுமாலே!

தீவாய் நாகணையில் துயில்வானே! திருமாலே! இனிச் செய்வதொன்றறியேன்,

ஆவா வென்றபடியேற்கிறை இரங்காய் அழுந்தூர் மேல்திசை நின்ற வம்மானே!"

**5) ஆமருவியப்பனை தசாவதார மூர்த்தியாக திருமங்கை ஸேவித்தல்**

துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனத்திற்காக, அந்தந்த சமயங்களில் மீனாகவும், ஆமையாகவும், வராஹமாகவும், நரஸிம்ஹமாகவும், ஸர்வேச்வரனாகவும் விளங்கிய ஆமருவியப்பனை தசவிதரூபனாக திருமங்கை பல பாசுரங்களில் கொண்டாடியிருக்கிறார். ஆமருவியப்பன், ப்ரம்மனும், ருத்ரனும் வழிபடும் தசாவதார ஸ்வரூபியாக திருஅழுந்தூரில் கோயில் கொண்டிருப்பதை ஒரு பாசுரத்தில் கூறி, அப்பேற்ப்பட்ட தசவித அவதார மூர்த்தியைப் பற்றி தான் பாடிய பாடல்களை கற்பவர்கள் தேவர்களுக்கு சமமான கீர்த்தியை அடைந்தவர்கள் எனப் பின்வருமாறு தெரிவித்தார்:

"பன்றியாய் மீனாகியரியாய்ப் பாரைப் படைத்துக் காத்துண்டுமிழ்ந்த பரமன் தன்னை,

அன்றமரர்க்கதிபதியும் அயனும் சேவும் அடிபணிய அணியழுந்தூர் நின்ற கோவை

கன்றி நெடு வேல்வலவன் ஆலிநாடன் கலி கன்றி பொலி செய்தவின்பப்பாடல்

ஒன்றினோடு நான்கு மோரைந்தும் வல்லார் ஒலிகடல் சூழ் உலகாளும் உம்பர்தாமே"

பலவித அவதாரங்கள் செய்து, உலகத்தை ஸ்ருஷ்டித்து, ரக்ஷித்து, ஸம்ஹரித்து நான்முகன், தேவேந்த்ரன், ருத்ரன் முதலியவர்களால் ஆராதிக்கப்பட்டு, தேரழுந்தூரில் நிற்கும் ஸர்வ லோக சரண்யனைப் பற்றி பக்தி மேலீட்டால் தான் செய்த தசாவதார பாசுரங்களைக் கற்றறிபவர்கள் கடல் சூழ் ஞாலமாளும் அதிகாரம் பெறுவர் என திருமங்கை மேல் காணும் பாசுரத்தில் அறிவித்தார்.

தேரழுந்தூர் எம்பெருமானை மங்களாஸாஸனம் செய்யும் போது தசாவதாரங்களை ஞாபகப்படுத்துவதுடன் மாத்திரம் நிற்காது, ஹயக்ரீவ அவதாரம்,

www.sadagopan.org

வடபத்ரஸாயி அவதாரம், கஜேந்த்ர மோக்ஷம் ஆகிய மூன்று விஷயங்களையும் திருமங்கை பாடிப் போற்றினார். அந்த மூன்று விஷயங்களை முதலில் எழுதி, அதன் பின் ஆமருவியப்பனைப் பற்றிய தசாவதார பாசுரங்கள் பற்றி தெரிவிக்கிறேன். ஆமருவியப்பனின் திருநாமம், பசுக்களிடம் வாத்ஸல்யம் கொண்ட கோபாலன் என்ற தத்வத்தைக் குறிப்பிடுவதால், திருமங்கை தேரழுந்தூரின் பாசுரங்களுள் க்ருஷ்ணாவதாரத்தை விஸ்தாரமாகக் கொண்டாடியிருக்கிறார். உதாரணமாக, தேரழுந்தூர் பற்றிய 45 பாசுரங்களுள் பத்து க்ருஷ்ணாவதாரம் பற்றியவை; மூன்று ராமாவதாரம் பற்றியவை; மூன்று நரஸிம்ஹாவதாரம் பற்றியவை; பரசுராம, வராஹ, வாமன அவதாரங்கள் பற்றி மொத்தத்தில் மூன்று பாசுரங்கள்.

## 5.1) ஆமருவியப்பனை வடபத்ரஸாயியாக திருமங்கை ஸேவிப்பது

ப்ரளய காலத்தின் வெள்ளத்தில், உலகங்கள் ஜீவன்கள் எல்லாவற்றையும் தன் வயிற்றுக்குள் அடக்கி, ரக்ஷித்து, உமிழ்ந்து ஸ்ருஷ்டி கார்யங்களில் மறுபடியும் ஈடுபடும் பரம பொருளை ஆலிலைமேல் சயனம் செய்து கொண்டு, தன் கால் கட்டை விரலை சுவைக்கும் சிறு குழந்தையாக திருமங்கை கண்டு பின்வருமாறு புகழ்ந்தார்:

"வெள்ளத்துள் ஓராலிலை மேல் மேவி அடியேன் மனம் புகுந்து, என்

உள்ளத்துள்ளும் கண்ணுள்ளும் நின்றார் நின்றவூர் போலும் .....

.....பகலுமிரவும் தானேயாய் பாரும் விண்ணுந்தானேயாய்

நிகரில் சுடராயிருளாகி நின்றார் நின்றவூர் போலும்"

இங்கு ப்ரஹ்ம்ம சூத்ரம் "दृश्यते तु" (த்ருஸ்யதே து) என்று சுருக்கமாக சொல்லும் பகவானின் ஸ்ருஷ்ட்டிச் செயல்களை திருமங்கை இங்கு விளக்குகிறார். அழியும் வஸ்துக்கள், அழியாப்பரம் பொருளினிடமிருந்து தோன்றுவதை இந்த ப்ரஹ்ம்ம சூத்ரம் குறிப்பிடுகிறது. இந்த தத்வத்தையே முண்டக உபநிஷத்தும் பின்வருமாறு விளக்குகிறது:

यथोर्णानाभिः सृजते गृह्णते च यथा पृथिव्यामोषधयाः संभवन्ति। यथा सतः पुरुषात् केशलोमानि तथाऽक्षरात् संभवतीह विश्वम्॥ (யதோர்ணாபி: ஸ்ருஜதே க்ருஹ்ணதே ச யதா ப்ருதிவ்யாமோஷதயா: ஸம்பவந்தி| யதா ஸத: புருஷாத் கேசலோமானி ததாக்ஷராத் ஸம்பவதீஹ விச்வம்||) எப்படி சிலந்தி தன்னுடைய அங்கங்களை நீட்டி வலை பின்னுவது போலும், உயிர்காக்கும் பச்சிலைகள் பூமியிலிருந்து வெளிப்படுவது போலும், உயிருடன் உள்ள

www.sadagopan.org

மனிதனின் உடலிலிருந்து ரோமங்கள் வெளிப்படுவது போலும், அழிவில்லாப் பரம் பொருளிடமிருந்து, உலகங்கள் உதிக்கின்றன என முண்டக உபநிஷத் வாக்யம் கூறுகிறது.



வடபத்ர ஸாயி

தானே பகலாகவும், இரவாகவும், தானே ஆகாஸமாயும், தானே அங்கு விளங்கும் ஸூர்ய, சந்த்ர, நக்ஷத்ரங்களாகவும் நிற்பதை "பகலும் இரவும் தானே ஆய் பாரும், விண்ணும் தானே ஆய், நிகரில் சுடராய் இருளாகி நின்றார்" என திருமங்கை ஆமருவியப்பனைப் பற்றிச் சொன்னார். விண்ணும், மண்ணும் ஸ்ருஷ்ட்டிக்கு முன் பரப்ரஹ்ம்மத்தினுள் அடக்கமாகி இருந்ததையும், சூக்ஷ்மமாக தன்னுள் அடங்கி இருந்த அவைகளை ஸ்வரூப விசேஷத்துடன் பரப்ரஹ்ம்மம் வெளிப்படுத்தியதை பல உபநிஷத்துகள் கொண்டாடி இருக்கின்றன. உதாரணமாக, பின்வரும் தைத்திரீய உபநிஷத் பகுதிகள் திருமங்கை மன்னனின் தேரழுந்தூர் பாசுரப்பகுதிகளுக்கு ஆதாரமானவை:

"असद्वा इदमग्र आसीत् ततो वै सदजायत। तदात्मानं स्वयमकुरुत॥" ஸ்ருஷ்டிக்கு முன் லோகங்கள் அஸத் (subtle, சூக்ஷ்மம்) என்ற வகையில் இருந்தன. பின்னர் ஸ்வரூப

www.sadagopan.org

விசேஷத்துடனும், நாம ரூபங்களுடனும் (gross), அவை வெளிப்பட்டன. பரப்ரஹ்ம்மமே தன்னிடமிருந்து ஸத் (gross), என்ற நாம ரூப லோகங்களை ஸ்ருஷ்டித்தான் என உபநிஷத் தெரிவிக்கிறது. தைத்திரீய உபநிஷத் அடுத்த பகுதிகளில், அஸத் (असद्) என்று இருந்தவைகளை ஸத் (सद्) என்று வெளிப்படுத்திய பரம்பொருளிடம் சந்தேஹமில்லாது பூர்ண நம்பிக்கை கொண்டு ஜீவன் இருந்தால் அந்த ஸ்வயம் ஜ்யோதியான ஆதிகாரணன் ஜீவனின் பயங்கள் அகற்றி மோக்ஷமளிப்பான் எனப்பின் வருமாறு கூறுகிறது: "यदाह्येवैष एतस्मिन् न दृश्येऽनात्मये, अनिरुक्ते अनिलयने अभयं प्रतिष्टां विन्दतेऽथ सोऽभयं गतो भवति। यदाह्येवैष एतस्मिन्नुदरमन्तरम् कुरुते अथ तस्य भयं भवति॥" யதாஹ்யேவைஷ ஏதஸ்மின் ந த்ருச்யேऽநாத்மயே, அநிருக்தே, அநிலயனே அபயம் ப்ரதிஷ்டாம் விந்ததேऽத ஸோபயம் கதோ பவதி| யதாஹ்யேவைஷ ஏதஸ்மின்னுதரமந்தரம் குருதே அத தஸ்ய பயம் பவதி||"

ஒருவிதமான ஐய்யமும் இல்லாது, பரிபூர்ண ச்ரத்தையுடன், அத்ருஸ்ய, அனாத்ம்ய, அனிருத்த, அனிலயன, நிர்குணப்ரஹ்ம்மத்தை நம்பினோர்களுக்கு தவறாது ஜீவன்முக்தி கிடைக்கும். லவலேசமும் சந்தேஹப்படுபவர்களுக்கும், போலி பாகவதர்களுக்கும் மோக்ஷம் கிடைக்காது என உபநிஷத் சொல்கிறது. அப்பேற்பட்ட நிர்குண ப்ரஹ்ம்மத்தை ஆமருவியப்பன் என்ற ஸகுணப்ரஹ்ம்ம அர்ச்சாவதார ஸ்வரூபியாக, தேரழுந்தூரில் திருமங்கை ஸேவித்துக் கொண்டு "வெள்ளத்துள் ஓர் ஆலிலை மேல் மேவி அடியேன் மனம் புகுந்து, என் உள்ளத்துள்ளும், கண்ணுள்ளும் நின்றார்" என நமக்கு தெரிவித்தார். அப்பேற்ப்பட்ட அழுந்தூரானை ஸேவித்துக் கொண்டதன் மூலம், ஸம்ஸார பயங்கள் அழிந்து, தான் உஜ்ஜீவனம் பெற்று, உய்ந்த வகையை, "அணியழுந்தூர் உடையானை அடியேனடைந்துய்ந்து போனேனே" என்று திருமங்கை உறுதியாகச் சொன்னார்.

## 5.2) ஆமருவியப்பனை ஹயக்ரீவதாரமாக திருமங்கை ஸேவிப்பது

ஶ்ரீமந்நாராயணன் ப்ரஹ்ம்மாவை தன் நாபி கமலத்தில் படைத்து, அவருக்கு வேதங்களைக் கற்றுக்கொடுத்தார். ப்ரஹ்ம்மா உலகங்களை படைக்க ஆரம்பித்தார். அந்த சமயம் மது, கைடபன் என்ற இரு அசுரர்கள் ப்ரஹ்ம்மாவிடம் ஒப்படைக்கப்பட்ட வேதங்களை திருடிக் கொண்டு மறைந்தனர். ப்ரஹ்ம்மா வேதங்களை இழந்து, கண் இழந்த மனிதன் போல் குருடனாகி, படைக்கும் சக்தியையும் இழந்தார். தன் பிதாவான ஶ்ரீமந்நாராயணனை தன் கதி கண்டு இரங்கி ரக்ஷிக்க வேண்டினார்.

www.sadagopan.org

ஸ்ரீமந்நாராயணனும் உதவி செய்ய சம்மதித்து, ஸ்ரீ லக்ஷ்மீஹயக்ரீவனாக அவதரித்து, மது கைடபர்களை ஸம்ஹரித்து, வேதங்களை மீட்டு தன் மகனுக்கு மறுபடியும் அளித்தார். தன் மந்த்ரஸ்வரூபமான சரீரத்தை த்யானம் செய்பவர்களுக்கு ஞானம், பக்தி, அனுஷ்டானம் ஆகிய சித்திகள் கிட்டி கடைசியில் தன் லோகமாகிய வைகுண்டம் அடைந்தவர்கள் என ஸ்ரீஹயக்ரீவ பகவான் நான்முகனுக்கு அறிவித்தார்.

ஸ்ரீஹயக்ரீவ பகவான் ஹம்ஸ சப்தத்தாலும் அறியப்படுபவர் என்று மேதினீகோசம் சொல்கிறது. பகவான் ஹம்ஸ ரூபமெடுத்து வேதங்களின் உட்பொருள்களை நான்முகனுக்கு உபதேசித்ததும் ப்ரஸித்தமான விஷயமே. ஹம்ஸம் உலகத்தை துறந்த ஸன்யாஸிகளையும் அவர்களுடைய ஞான, பக்தி, அனுஷ்டானங்களைக் குறிப்பிடும் பக்ஷி. அதனால் "அன்னம் மலி பெடையோடு மமருஞ்செல்வத்து அணியழுந்தூர்" என்று திருமங்கை திருவழுந்தூர் பாசுரங்களில் சொல்லும் போது ஸ்ரீ லக்ஷ்மீஹயக்ரீவனைக் குறிப்பிடுவதாகவும் நாம் ஏற்றுக் கொள்ளலாம். ஸ்ரீமத் பாகவதம் விவரிக்கும் ஹம்ஸாவதாரமும் ஸ்ரீமஹாபாரதம் கூறும் ஸ்ரீஹயக்ரீவாவதராமும் ஒருமைப்பாடு கொண்டவை. பரம பாகவதர்களுக்கு நிவ்ருத்தி தர்மங்களையும், ஸம்ஸாரிகளுக்கு ப்ரவ்ருத்தி தர்மங்களையும் உபதேசித்த ஹயக்ரீவ பகவான் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் ஸ்ரேஷ்டமான அவதாரம். தசாவதாரங்களுக்கு முந்திய அவதாரம். அவரை,

பீதாம்பரம்தரம் தேவம் ஸ்ரீவத்ஸாங்கித வக்ஷஸம்|

முக்யஹஸ்தத்வயேனைவ ஞானமுத்ராக்ஷபுஸ்தகம்|

என ஸ்ரீ ஹயக்ரீவ பஞ்சரம் நமஸ்கரித்துக் கொண்டு, "धारयन्तं हयग्रीवं ध्यायोदिष्टार्थसिद्धये" ("தாரயந்தம் ஹயக்ரீவம் த்யாயேதிஷ்டார்த்த ஸித்தயே") என தெரிவிக்கிறது. முக்யமான இரண்டு கைகளில் ஞானமுத்ரையையும், புஸ்தகத்தையும் தரித்துக் கொண்டிருக்கும் ஹயக்ரீவ பகவானை இஷ்ட காம்யார்த்த ஸித்திகள்கிட்ட த்யானிக்க வேணும் என்று ஸ்ரீஹயக்ரீவ பஞ்சரம் அறிவிக்கிறது. எவரை அடைவதால் மனித ஜன்மங்கள் அழிந்து மோக்ஷ சாம்ராஜ்யம் கிட்டுகிறதோ, அந்த ஹயக்ரீவனை திருமங்கை यत् प्राप्याऽऽत्यन्थिकवृत्तिनिवृत्त्या मोक्षमेष्यति (யத் ப்ராப்யாऽऽத்யந்திகவ்ருத்திநிவ்ருத்யா மோக்ஷமேஷ்யாதி) என்ற ப்ரகாரம் திருவழுந்தூரில் நமஸ்கரித்துக் கொள்கிறார்.

"வேத வேதாந்த சாஸ்த்ரார்த்த தத்வ வ்யாக்யாந தத்பரனான" பரிமுகப்பெருமான

www.sadagopan.org

திருமங்கை கொண்டாடும் பாசுரம் பின்வருமாறு:

“முன்னிவுலகேழும் இருள் மண்டியுண்ண முனிவரொடு தானவர்கள் திசைப்ப, வந்து

பன்னுகலை நால் வேதப்பொருளையெல்லாம் பரிமுகமாயருளிய என் பரமன் காண்மின்

செந்நெல்மலிகதிர் கவரிவீசச் சங்கமவைமுரலச் செங்கமல மலரையேறி

அன்னம் மலிபெடையொடுமமருஞ்செல்வத்து அணியழுந்தூர் நின்றுகந்தவமரர் கோவே”

ஹம்ஸ தம்பதிகளை செந்நெல்வயல் காடுகளில் கண்ட திருமங்கைக்கு “ப்ரக்ஞானமானந்தம் ப்ரஹ்ம்மா, தத்வமஸி, அயமாத்மா ப்ரஹ்ம்மா, அஹம் ப்ரஹ்ம்மாஸ்மி” என்று நாலு வேதங்களுடைய மஹாவாக்யங்களின் அர்த்தங்களை நான்முகனுக்கு விளக்கிய ஹயக்ரீவ பகவானின் ஞாபகம் வந்து விடுகிறது.

“விஸ்வோத்தீர்ண ஸ்வரூபாய, சின்மயாநந்த ரூபிணே --- ஓம்காரோத்கீத ரூபாய ருக்யஜுஸ்ஸாம மூர்த்தயே, நமோஸ்து தேவதேவாய வாஞ்சிதார்த்தப்ரதாயினே” என சதுர்முக ப்ரஹ்ம்மா, பரிமுகப் பெருமாளிடம் ப்ரார்த்தித்து வேதங்களை மறுபடியும் பெற்ற சம்பவம் திருமங்கைக்கு செந்நெல் காட்டு அன்னஜோடிகளைக் காணும் போது மனத்திரை முன் வருகிறது:

“வேத கர்த்தா வேதப (அ)ர்த்தா வேதாஹர்த்தா விதாம்வர: புங்காநுபுங்க ஹேஷாட்ய: பூர்ண ஷாட்குண்ய விக்ரஹ:” என்று துதிக்கப்படும் ஹயக்ரீவனின் அவதார மஹிமையைப் பற்றி திருவழுந்தூரில் பாட ஆரம்பிக்கிறார். பிரமன் வேதங்களை இழந்ததால் முனிவர்களும் அசுரர்களும் அக்ஞானத்தில் ஆழ்ந்து தவிக்கும் போது, “பன்னுகலை நால் வேதப்பொருளையெல்லாம் பரிமுக மாயருளிய” ஹயக்ரீவனின் அனுக்ரஹ விசேஷத்தை ஸ்லாகித்து அவன் ஆமருவியப்பனாக திருவழுந்தூரில் நிற்கும் “என் பரமன்” என திருமங்கை விளக்கினார்.

## 5.3) ஆமருவியப்பனை கஜேந்த்ர மோக்ஷதாயகனாக திருமங்கை ஸேவிப்பது

செந்நெல் காட்டில் தன் பேடையுடன் செந்தாமரை புஷ்பத்தின் மேல் அமர்ந்திருக்கும் ஹம்ஸபக்ஷியைக் கண்டு, ஹயக்ரீவ அவதாரத்தைப் பாடிப்புகழ்ந்த திருமங்கை மன்னனுக்கு அடுத்தபடியாக செந்தாமரை குளமொன்றில் முன்னம் ஒரு நாள் நடந்த கஜேந்த்ர மோக்ஷ சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது.

“ஆதிமூலமே, என்னைக் காப்பாற்று என்று கதறிய கஜேந்த்ரனை ரக்ஷிக்க

www.sadagopan.org

கருடவாஹன மேற் ஓடோடியும் வந்த ஆமருவியப்பனின் பக்த ஸம்ரக்ஷணம் நினைவு வந்து பின்வரும் பாசுரத்தை திருமங்கை நமக்கு அளித்தார்.

“குலத்தலைய மதவேழம் பொய்கை புக்குக்

கோள்முதலை பிடிக்கவதற்கனுங்கி நின்று

நிலத்திகழும் மலர்ச்சுடரேய் சோதீயென்ன

நெஞ்சிடர் தீர்த்தருளிய என் நிமலன் காண்மின்

மலைத்திகழ் சந்தகில் கனகம்மணியுங்கொண்டு

வந்துந்தி வயல்கள் தொறும் மடைகள் பாய

அலைத்துவரும் பொன்னி வளம் பெருகுஞ்செல்வத்து

அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே”

தான் ஜனித்த மலைச்சாரலில் வளர்ந்த சந்தனமரங்கள், அகில் கட்டை இவைகளையும், பொன், ரத்னங்கள் முதலியவைகளையும் அடித்துக் கொண்டு வந்து திருவழுந்தூர் வயல்களில் தள்ளும் காவேரி நதிப்ரவாஹத்தின் சிறப்பை இங்கு திருமங்கை விவரிக்கிறார். அங்கு தேவாதி தேவனான ஆமருவியப்பன், முதலை வாய்ப்பட்டு, தப்பும் வழி தெரியாது, ஆதிமூலமே என்று கதறி அழைத்த கஜேந்த்ரனை வேகமாக வந்து காப்பாற்றி அருள்புரிந்ததை மேற்காணும் பாசுரத்தின் முதல் பகுதியில் கொண்டாடினார்.

## 5.4) ஆமருவியப்பனை பூவராஹனாக திருமங்கை ஸேவித்துக்கொண்டது

அடுத்த திருவழுந்தூர் பாசுரத்தில், காவேரி வெள்ளம் கண்டு, ப்ரளய கால ஜலத்தின் ஞாபகம் வந்து, அந்த ஜலத்தின் உள்ளிருந்து ஒரு அழகிய பெண்ணைத்தன் கோரைப்பல்லின் வளைவில் அமர்த்திக்கொண்டு வெளிப்பட்ட ஆதிவராஹத்தைக் கண்முன் திருமங்கை காண்கிறார். இந்த காக்ஷியை அவர் காணும் இடம்

“புலம்பு சிறை வண்டொலிப்ப, பூகம் தொக்கப்

பொழில்கள் தொறும் குயில்கூவ மயில்களால்

அலம்புதிரைப்புனல் கடை சூழ்ந்தழகார் செல்வத்து

அணிஅழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே”

www.sadagopan.org

என்று தேரழுந்தூர். காவேரி வெள்ளத்தின் வண்டல் சிறப்பால் செழித்துள்ள பாக்குத் தோப்புகளில், வண்டினங்கள் ரீங்காரம் செய்வதையும், குயில்கள் கூவுவதையும், மயில்கள் ஆடுவதையும் திருமங்கை திருவழுந்தூரில் காண்கிறார். அந்த பொன்னியாற்றின் வெள்ளம், "ப்ரஹ்மாண்ட ப்ரளயோர்மி கோஷ குருபிர் கோணாரவைர்குர்க்குரை:" என்றபடி, ப்ரஹ்ம்மாண்டமான ப்ரளய காலத்து அலைகளைவிட அதிகமான ஒலி உடைய குர்குர் என்ற சப்தத்தை ஏற்படுத்திக் கொண்டு, தன் பிராட்டியுடன் ஜலராசியிலிருந்து வெளிப்படும் பூவராஹ மூர்த்தியை திருமங்கைக்கு ஞாபகப்படுத்தியது. இந்த அத்புதமான காக்ஷியைப்பின் வருமாறு திருமங்கை ஸேவித்துக் கொண்டார்:

"சிலம்பு முதல் கலனணிந்தோர் செங்கண் குன்றம்

திகழ்ந்ததெனத் திருவுருவும் பன்றியாகி,

இலங்குபுவி மடந்தை தனையிடந்து புல்கி

எயிற்றிடை வைத்தருளிய எம்மீசன் காண்மின்"

செந்தாமரைகள் மலர்ந்துள்ளதுபோல் உள்ள ஒரு ப்ருஹ்ம்மாண்டமான மலைக்கு சமமான ஒரு உருவம் செங்கமலக் கண்களுடன் வராஹஸ்வரூபத்துடன் தன் முன் தோன்றுவதை திருமங்கை கண்டு, "செங்குன்றம் திகழ்ந்ததெனத் திருவுருவம் பன்றியாகி" என துதித்தார். அந்த ஆதிவராஹத்தின் தித்தி பல்லை அணைத்துக் கொண்டு கால் சிலம்பிலிருந்து ஸர்வாபரணங்களையும் அணிந்து கொண்டு, பூமி பிராட்டி பகவானின் தோளில் அமர்ந்து, ஸேவை தருவதையும் காண்கிறார். இந்த காக்ஷியை "சிலம்புமுதல் கலனணிந்து...இலங்கு புவிமடந்தை தனையிடந்து புல்கி எயிற்றிடைவைத்தருளிய எம்மீசன்" எனப்பாட்டி திருமங்கை ஆனந்தித்தார்.

## 5.5) ஆமருவியப்பனை நரசிங்கனாக திருமங்கை ஸேவிப்பது

திருவழுந்தூர் பற்றிய திருமங்கையின் 45 பாசுரங்களில் மூன்று நரஸிம்ஹாவதாரத்தைக் கொண்டாடுகின்றன. ஒரு பாசுரத்தின் "சினமேவும் அடலரியினுருவமாகித் திறல் மேவுமிரணியன தாகங்கீண்டு" அணியழுந்தூர் நின்றுகந்த அமரர்கோவே என திருமங்கை மங்களாஸாஸனம் செய்தார். கோபம் மிகுந்த சிங்கத்தின் உருவெடுத்து, பலிஷ்டனான ஹிரண்யனின் மார்பை கிழித்த ஆமருவியப்பா என இங்கு நமஸ்கரித்துக் கொண்டார். மற்ற ஒரு பாசுரத்தில், "ப்ரஹ்லாத கேத பரிஹார பராவதார"

www.sadagopan.org

என்று பாலனாகிய ப்ரஹ்லாதனுடைய கஷ்டங்களை விலக்குவதற்காக ஹிரண்யனின் சபையில் உள்ள தூணிலிருந்து வெளிப்பட்ட நாரசிம்ம மூர்த்தத்தை பின் வருமாறு நமஸ்கரித்துக் கொண்டார்:

“சிங்கமதாய் அவுணன் திறலாகமுன் கீண்டுகந்த

சங்கமிடத்தானை தழலாழிவலத்தானை

செங்கமலத்தயனனையார் தென்னழுந்தையில் மன்னி நின்ற

அங்கமலக்கண்ணனை அடியேன் கண்டு கொண்டேனே”

நரசிங்கமாய் அசுரனின் மார்பை பிளந்து, துஷ்ட நிக்ரஹம் செய்து களித்த ப்ரபுவை சங்க சக்ரதரனாய் திருஅழுந்தூரில் திருமங்கை ஸேவித்துக் கொள்கிறார். ஆமருவியப்பன் நரஸிம்ஹாவதரத்துடன் ஸேவை தரும் போது வலது கையில் நெருப்பு அனல்கள் வீசும் சக்கரத்தையும், இடது கையில் வெள்ளை விரி சங்கையும் ஏற்றிருப்பதை “சங்கமிடத்தானை, தழல் ஆழி வலத்தானை” என வணங்கிக் கொண்டார். திருவழுந்தூரில் நரசிம்ஹனாக ஸேவை தந்த “அங்கமலக் கண்ணனை” தாஸனாகிய தான் கண்டு, சரணாகதி கொடுக்கும் புனிதனாக அறிந்து கொண்டதை “அடியேன் கண்டு கொண்டேன்” எனச் சொன்னார். இந்த பாசுரம், ஆதி சங்கரரின் “லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ கராவலம்பன” ஸ்தோத்ரத்தின் பின்வரும் ஸ்லோகத்தை ஞாபகப் படுத்துகிறது:

“ஏகேன சக்ரமபரேண கரேண சங்கம்

அந்யேன ஸிந்து தனயாம வலம்ப்ய திஷ்டன்

வாமேதரேண வரதாபயபத்ம சின்ஹ

லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம்”

வைகுண்ட கண்டீரவ: (वैकुण्ठकण्ठीरवः) என்ற நரஸிங்க வடிவு கொண்ட எம்பெருமானை மற்ற ஒரு பாசுரத்தில், தனக்கு கைகொடுத்து, ஸம்ஸார ஸாகரத்திலிருந்து காப்பாற்ற வேணும், உனது திருவடிகளைத்தவிர மற்ற ஒன்றையும் என்னை காக்க சக்தியுள்ளதாக கருதவில்லை. ஆமருவியப்பா என்னை கைவிட்டு விடாதே! கலியுகத்தின் கொடுமையில் மாட்டிக்கொண்டு முழிக்கும் எனக்கு உய்யும் வழி உன்னுடைய திருவடிகளை கெட்டியாக பிடித்துக் கொள்வதுதான் என்பது தெரிய வந்தது. உன்னையே நம்பியுள்ளேன். என்னைக் காப்பாற்று எனப்பின் வருமாறு

www.sadagopan.org

தீனமாக ப்ரார்த்தித்தார்:

“விண்டான் விண்புக வெஞ்சமத்து அரியாய்ப்

பரியோன் மார்வகம் பற்றிப் பிளந்து

பண்டானுய்ய வோர் மால்வரை ஏந்தும்

பண்பாளா! பரனே! பவித்திரனே!

கண்டேன் கலியுகத்ததன் தன்மை

கருமமாவது மென்றனக்கறிந்தேன்

அண்டா! நின்னடியன்றி மற்றறியேன்

அழுந்தூர் மேல்திசை நின்றவம்மானே”

“பண்டு அரிஆய் வெஞ்சமத்து பரியோன் மார்வு அகம் பற்றி விண்டான் விண்புக பிளந்து” என்று நரஸிம்ஹாவதார சம்பவங்களை திருமங்கை இங்கு விவரித்தார். முன்னொரு சமயம், ந்ருஸிம்ஹனாய் தூணில் தோன்றி, கொழுத்த உடல் உடைய ஹிரண்யனுடன் கடும்போர் புரிந்து, அவனை மடியில் போட்டு நகங்களால் மார்பை கிழித்து வீர ஸ்வர்க்கம் அடையும்படி செய்த பரந்தாமனே! புண்ய ஸ்வரூபியே! கலியுகத்தின் கொடுமைகள் என்னை அணுகாதபடி காத்தருள். உன் திருவடியே சரணம் என இங்கு வேண்டிக் கொண்டார்.

கலியுகம் ஒரு மதயானையைப் போல் தன்னை துரத்தி உபத்ரவிக்கிறது. அதனிடமிருந்து தப்பி, எங்கு ஓடுவது என்று தெரியாமல் களைத்து இருக்கும் தனக்கு நரஸிங்கத்தைத் தவிர வேறு ஒரு ரக்ஷகமூர்த்தியும் கிடையாது என திருமங்கையின் பாசுரம் குறிப்பிடுவது ஸ்ரீ ஆதி சங்கரரின் மற்ற ஒரு லக்ஷ்மீந்ருஸிம்ஹ ஸ்லோகத்தை ஞாபகப்படுத்துகிறது. அந்த ஸ்லோகத்தில் ஆதி சங்கரர், கலியுகத்தில் ஸம்ஸாரமாகிற மதயானையின் காலடியில் தான் மிதிக்கப்பட்டு அவஸ்தைப்படுவதை தெரிவிக்கிறார். அந்த கஷ்டம் பொறுக்காது சம்ஸாரம் என்ற கொடிய யானையை துரத்தும் சக்தி உடையது சிங்கம் ஒன்றுதான். அதனால், நரசிங்கனாகிய நீதான் தர்மம் குறைந்திருக்கும் கலியுகத்தின் ஸம்ஸாரக் கொடுமையிலிருந்து காப்பாற்ற வேண்டுமென வேண்டினார். இந்த ஸ்லோகம் பின் வருமாறு:

www.sadagopan.org

| | |
|---|---|
| संसारभीकरकरीशकराभिघात | ஸம்ஸார பீகர கரீச கராபி காத |
| निष्पिष्टमर्म वपुषः सकलार्तिनाश। | நிஷ்பிஷ்டமர்ம வபுஷஸ் ஸகலார்த்திநாச\| |
| प्राणप्रायाण भव भीतिसमाकुलस्य | ப்ராணப்ரயாண பவ பீதி ஸமாகுலஸ்ய |
| लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम्॥ | லக்ஷ்மீந்ருஸிம்ம மம தேஹி கராவலம்பம்\|\| |

**5.6) ஆமருவியப்பனை பரசுராமனாக திருமங்கை ஸேவித்துக் கொண்டது**

தந்தையான ஜமதக்னி முனிவரைக் கொன்ற கார்த்தவீர்யன் என்ற அரசனின் புத்ரர்களையும், அரசர் குலங்களையும் இருபத்தோறு தலைமுறை க்ஷத்ரிய பூண்டு இல்லாது கொன்று குவித்த பரசுராமனின் வீரச்செயல்களை அடுத்தபடியாக திருமங்கை பாடினார். தன் தந்தைக்கு ஏற்பட்ட அநீதியை விலக்க அரசர் குலங்களை அழித்து, அவர்கள் உதிரத்தினால் தன் தந்தைக்கு தர்ப்பணம் செய்த பரசுராமனாக ஆமருவியப்பனை திருமங்கை பின் வருமாறு ஸேவித்துக் கொண்டார்:

“ கோவானார் மடியங்கொலையார் மழுக்கொண்டருளும்

மூவாவானவனை முழுநீர்வண்ணனை அடியார்க்கு

ஆவாவென்றிரங்கித் தன்னழுந்தையில் மன்னி நின்ற

தேவாதி தேவனை யான் கண்டு கொண்டு திளைத்தேனே”

ஆமருவியப்பனை, “மூவா வானவன்” என்ற கிழத்தனம் என்றுமே தோன்றாத நித்யயுவாவாகவும், கடல் நிறம் கொண்ட ”முழுநீர்வண்ணனாகவும்” இங்கு ஸேவித்துக் கொள்கிறார்.

**5.7) ஆமருவியப்பனை வாமனனாக திருமங்கை பாடிப்போற்றியது**

தேன்வண்டு உலாவும் சோலைகளும், அழகான வீதிகளை அலங்கரிக்கும் வீடுகளும், அந்த வீடுகளில் வசித்து வரும் வேதவித்துகளும் நிரம்பிய திருவழுந்தூர் என்ற திருப்பதியில், ஆமருவியப்பனை வாமன மூர்த்தியாகக் கண்டு பின் வரும் பாசுர வாக்யங்களால் திருமங்கை வணங்கிக் கொண்டார்:

”வானவர் தம் துயர் தீர வந்து தோன்றி

மாணுருவாய் மூவடி மாவலியை வேண்டி

www.sadagopan.org

தானமர வேழுலகுமளந்த வென்றித்

தனி முதல் சக்கரப் படையென் தலைவன் காண்மின்

தேனமரும் பொழில்தழுவுமொழில் கொள் வீதிச்

செழு மாட மாளிகைகள் கூடந்தோறும்

ஆன தொல்சீர் மறையாளர் பயிலுஞ்செல்வத்து

அணியழுந்தூர் நின்றுகந்தவமரர் கோவே"

தேவர்கள் ப்ரார்த்தனைக்கிரங்கி, மஹா பலியின் கர்வத்தை அடக்க ப்ரஹ்ம்மசாரி வேஷம் பூண்டு,

"சத்ரீ கமண்டலுதர: வாமநோ

வததாம் வர: பிசுநாத்மாசநோ

த்ருஷ்டிலோபநோ பலிமர்தன:

உருக்ரமோ பலிசிரோ ந்யஸ்தாங்க்ரிர் பலிமர்தன:"

என்றபடி மூன்றடி மண் யாசித்து, அதன்பின் த்ரிவிக்ரமனாக மாறி, பலி சக்ரவர்த்தியின் தலை மேல் திருவடியை வைத்து, அவன் அகந்தையை அழித்ததை திருமங்கை இந்த பாசுரத்தில் விவரித்தார்:

## 5.8) ஆமருவியப்பனை ஸ்ரீராமசந்த்ரனாக திருமங்கை வழிபடுவது

தேரழுந்தூர் சம்பந்தப்பட்ட 45 பாசுரங்களில் மூன்று சக்ரவர்த்தி திருமகனின் அவதார விசேஷத்தைக் கொண்டாடுபவை. ஒரு பாசுரத்தில், தன்னிடம் சரணாகதி செய்யாது, தன்னை எதிர்த்து அபராதபட்ட ராவணனை அழித்த ஸ்ரீராமபிரானை ஆமருவியப்பனாக ஸேவித்து உய்ந்து போனதாக பின்வருமாறு சொன்னார்:

"அடையார் தென்னிலங்கையழித்தானை, அணியழுந்தூர்

உடையானை அடியேனடைந்துய்ந்து போனேனே"

மற்ற ஒரு பாசுரத்தில், திருவழுந்தூர், பொன்னிலங்கையின் நாதனான ராவணனின் பத்து தலைகளையும் ப்ரஹ்ம்மாஸ்த்ரத்தால் வெட்டித்தள்ளிய ராமபிரான் கோயில் கொண்ட ஊர் எனப் பின் வருமாறு அறிவித்தார்:

www.sadagopan.org

"செம்பொன் மதிள்சூழ் தென்னிலங்கைக் கிறைவன் சிரங்கள் ஐயிரண்டும்

உம்பர் வாளிக்கிலக்காக உதிர்த்த உரவோன் ஊர் போலும்

கொம்பிலார்ந்த மாதவிமேல் கோதி மேய்ந்த வண்டினங்கள்

அம்பராவும் கண்மடவார் ஐம்பால் அனையும் அழுந்தூரே"

செந்தமிழும், வடமொழியும் திகழும் திருஅழுந்தூரில், நான்முகனுக்கு சமமான வேதவித்துக்கள் நிறைந்திருப்பதைச் சொல்லி, ராவண ஸம்ஹாரம் செய்து "வீரராகவன், விஜயராகவன்" என்று பெயர் பெற்ற ராமசந்த்ரமூர்த்தி இங்கு விரும்பி வாழ்கிறான் என்று அடுத்தபடியாக திருமங்கை சொன்னார். இந்த பாசுர வாக்யங்கள் பின் வருமாறு ராமாவதாரத்தை புகழ்கின்றன:

"பந்தணைந்த மெல்விரலாள் சீதைக்காகிப்

பகலவன் மீதியங்காத விலங்கை வேந்தன்

அந்தமில் திண்கரஞ்சிரங்கள் புரண்டு வீழ

அடுகணையால் எய்து உகந்த அம்மான் காண்மின்,

செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர்

திசைமுகனை யனையவர்கள் செம்மை மிக்க

அந்தணர் தம் ஆகுதியின் புகையார் செல்வத்து

அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே"

பந்தைத் தன் கையில் கொண்டு, தன் மெல்லிய விரல்களால் அந்த பந்தை அடித்து தோழிகளுடன் மிதிலையில் விளையாடிய தன் தேவியை சிறை மீட்டுவதற்காகவும், ராவணன் என்ற துஷ்டனை நிக்ரஹம் செய்வதற்காகவும் கடுமையான அம்பினால் அவன் தலைகள், கைகள் முதலிய அங்கங்களை அறுத்த ஸ்ரீராமசந்த்ரமூர்த்திக்கு ப்ரியமான திவ்ய தேசம் திருஅழுந்தூர். இங்கு அவனைக் கண்டு ஸேவித்துக் கொள்ளுங்கள் என நமக்குச் சொன்னார்.

**5.9) ஆமருவியப்பனைக் கண்ணனாக திருமங்கை ஸேவித்துக்கொள்வது**

ஆமருவியப்பன் என்ற திருநாமம் க்ருஷ்ணாவதாரத்தில் பசுக்களை அன்புடன் மேய்த்த கோபாலனைக் குறிப்பிடும் என முன் பகுதியில் தெரிவித்திருக்கிறேன்.

www.sadagopan.org

கோபால நாம சம்பந்தத்தால், திருமங்கை ஆமருவியப்பனை பத்து பாசுரங்களில் ஆய்நிறை மேய்த்த கோவிந்தனாகக் கொண்டாடியிருக்கிறார்.

திருவழுந்தூர் சம்பந்தப்பட்ட பாசுரங்களில் க்ருஷ்ணாவதாரத்திற்கு மாத்திரம் தான், இந்த காரணத்தால் அதிகப்படியான விசேஷம் அளிக்கப்பட்டிருக்கிறது.




தேரழுந்தூர் குட்டிக் கண்ணன்

திருஅழுந்தூர் பற்றிய முதல் பாசுரத்தில் "ஜயந்தீ ஸம்பவம் தாம வைஜயந்தீ விபூஷணம்" என்றபடி துதிக்கப்படும் கோகுலாஷ்டமி தினத்தில் அவதரித்த கண்ணனின் அவதார சமயம் நடைபெற்ற விசேஷங்களைப் பின் வருமாறு திருமங்கை மன்னன் தெரிவித்தார்:

"தந்தை காலிற் பெருவிலங்கு தாளவிழ, நல்லிருட்கண்

வந்த செந்தை பெருமானார் மருவி நின்றவூர் போலும்

முந்தி வானம் மழைபொழிய மூவாவுருவின் மறையாளர்

அந்திமூன்று மனலோம்பும் அணியார் வீதியழுந்தூரே"

www.sadagopan.org

க்ருஷ்ணாவதார சமயம் ஆவணிமாதத்தின் க்ருஷ்ண பக்ஷத்து இருட்டு! பலமான மழை கொட்டிக் கொண்டிருக்கிறது. கம்ஸனின் கொடுமையால் வஸுதேவரும், தேவகியும் சிறையில் இருக்கிறார்கள். வஸுதேவரின் காலில் கனமான விலங்கு மாட்டப் பட்டிருக்கிறது. காராக்ருஹத்திற்கு வெளியே காவலர்கள் ரோந்து செய்து கொண்டிருக்கிறார்கள். மழையின் மிகுதியால் யமுனை இருகரையும் புரண்டு ப்ரவஹித்து கொண்டிருக்கிறது! அஷ்டமி திதியும், ரோஹிணி நக்ஷத்ரமும் சேர்ந்து இருக்கும் மங்களமான தினத்தின் இரவு காலம்! இந்த சமயம் அப்பன் அவதரிக்கிறான்! இந்த ஸ்ரீஜயந்தி தின இரவின் இருட்டை திருமங்கை, "நல்லிருட்கண் வந்த எந்தை" என விவரித்தார், இந்த அவதாரகாலத்தின் விசேஷத்தையே, ஸ்ரீமத் நாராயணீயத்தில் ஸ்ரீ நாராயண பட்டதிரி:

"ஆனந்தரூப பகவந்நயி தேऽவதாரே, ப்ராப்தே ப்ரதீப்த பவதங்க நிரீயமாணை:|

காந்தி வ்ரஜைரிவ கனாகன மண்டலைர்த்யாம் ஆவ்ருண்வதீ விருருசே கில வர்ஷ வேலா"

எனச் சொன்னார். ஆனந்த ஸ்வரூபியான க்ருஷ்ணா! தாங்கள் அவதாரம் செய்த ஸ்ரீஜயந்தி தினத்தில் வானம் மழைக்கால மேகங்களால் மூடப்பட்டு, தங்கள் நீலமேக ச்யாமள உருவத்திற்கு சமமாக இருந்ததாமே என ஸ்ரீ பட்டதிரி கேட்டார். பூமி குளிர்ந்த சமயத்தில் அவதரித்த அப்பனின் மாயையால், மதுரா நகரம் முழுதும் நித்ரையில் ஆழ்ந்தது. கோகுலமும் அதே மாதிரி நித்ரையில் ஆழ்ந்தது. "ஒருத்தி மகனாய் பிறந்து, ஓரிரவில் ஒருத்தி மகனாயொளித்து வளர" வேண்டும் என்பதற்காக, "அம்போருஹஸ்த கலஹம்ஸ கிசோர ரம்யம்" என்றபடி தாமரை புஷ்பத்தில் சயனித்திருக்கும் ஹம்ஸக்குஞ்சு போல் அழகாயுள்ள கண்ணன் மேலும் சில மாயைகள் புரிந்தான். தன் தகப்பனாரான வஸுதேவரின் விலங்குகள் விலகுமாறு செய்தான். சிறைக்காவலர்களை நித்ராவஸ்தையில் நிறுத்தினான். சிறை கதவுகளின் தாள்கள் விலகுமாறு நியமித்தான். யமுனையின் வெள்ளத்தை முழங்கால்வரை வடியுமாறு செய்தான். ஆதிசேஷனை குடையாக இருந்து வரச் சொல்லி, அவன் மணிகளின் ஒளியால் இரவின் இருட்டில் பாதையைத் தெளிவாகக் காணுமாறு செய்து, கோகுலம் சேர்ந்து, யசோதை சமீபம் சயனம் செய்து கொண்டான். கண்ணனை கோகுலம் சேர்த்த தகப்பனாரான வஸுதேவரும், யசோதையின் பெண்குழந்தையுடன் சிறைக்கு திரும்பினார். "மானுஷ பால வேஷம்" கொண்ட ஸ்ரீமந் நாராயணனான ஆமருவியப்பனின் ஆக்ஞையால் தகப்பனாரின் கால்

www.sadagopan.org

விலங்குகள் விலகி, அவர் கோகுலம் போக முடிந்ததை, திருமங்கை, “தந்தை காலிற் பெருவிலங்கு தாள வீழ, நல்லிருட் கண் வந்த வெந்தை பெருமானார் மருவி நின்றவூர் போலும்” என நமஸ்கரித்துக் கொண்டார்.

பிறகு திருமங்கை பால க்ருஷ்ணனாக ஆய்பாடியில் கண்ணன் பூதனாசம்ஹாரம் செய்து, மருதமரங்களை தாமோதரனாக சாய்த்தது, கோபிகைகளின் வீடுகளில் வெண்ணை திருடியது, குளிர்மழை தடுக்க கோவர்த்தனம் என்ற குன்றைத் தூக்கியது ஆகிய பாலகோபால லீலைகளை சில பாசுரங்களில் பின் வருமாறு சொன்னார்:

“வஞ்சனைப் பேய்முலையூடு உயிர்வாய் மடுத்துண்டானை

செஞ்சொல் நான்மறையோர் தென்னழுந்தையில் மன்னி நின்ற

அஞ்சனக் குன்றந்தன்னை அடியேன் கண்டு கொண்டேனே”

இங்கு பேய்ப்பெண்ணான பூதனை, கண்ணனுக்கு விஷப்பால் கொடுத்ததையும், கண்ணன் அவளிடம் ஸ்தன்ய பானம் செய்து அவள் உயிரை உறிஞ்சியதையும் திருமங்கை விவரித்தார்.

முழுதும் தோயாத இனிமையான தயிரையும், சட்டியில் உள்ள நெய்யையும் குடித்தது கண்டு, உன்னிடம் கோபம் கொண்ட ஆய்ச்சியர்கள் யசோதையிடம் புகார் செய்தனர். உன் தாயாரும், உன்னுடைய துஷ்டதனத்தைக் கேட்டு, வெகுண்டு, உன்னை உரலுடன் கட்டினாள். அதையும் பொறுத்துக் கொண்டு, அழுது, ஏங்கி நின்றாய். ஆய்குலத்தை விளக்க வந்த தாமோதரா! சாதாரணமாக மனிதர்களுக்கும், தேவர்களுக்கும் சுலபமாக கிட்டாத நீ, எளிமையுடன் ஒரு ஆய்ச்சியின் கயிற்றால் கட்டுப்பட சம்மதித்தாய். க்ருதயுகம், த்ரேதாயுகம், த்வாபரயுகம், கலியுகம் இந்த நான்கு யுகங்களுக்கும் முன்னதாகவே ஸ்வயம்புவாக (தான் தோன்றியாக) இருந்துவரும் கோபாலா! ஆமருவியப்பா! திருவழுந்தூர் மேல் திசை நின்று கலியில் ஜனங்களுக்கு அருள்புரிபவனே! உன்னையல்லால் எனக்கு ஒரு கதியும் கிடையாது. என்னை நீ தான் காத்தருள வேண்டும் என பின்வரும் அழகிய பாசுரம் மூலம் திருமங்கை ப்ரார்த்தித்துக் கொண்டார்:

“தோயாவின் தயிர் நெய்யமுதுண்ணச்

சொன்னார் சொல்லி நகும் பரிசே பெற்ற

தாயாலாப் புண்டிருந்தழுதேங்கும்

www.sadagopan.org

தாடாளா! தரையோர்க்கும் விண்ணோர்க்கும்

சேயாகு! கிரேத திரேத துவாபர

கலியுகமிவை நான்குமுனானாய்!

ஆயா!நின் அடியன்றி மற்றறியேன்

அழுந்தூர் மேல்திசை நின்றவம்மானே”

மற்ற ஒரு பாசுரத்திலும் “வம்பவிழும் மலர்க்குழலாளாய்ச்சி வைத்த தயிர் வெண்ணெய் உண்டுகந்த மாயோன் காண்மின்” என ஆமருவியப்பனை நமக்கு அறிமுகப்படுத்தினார், யசோதா பாக்யம் நவநீத க்ருஷ்ணனாக விளையாடியதை இங்கு சொன்னார்.

குழந்தை பருவத்தில் தன்னைக் கொல்ல வந்த சகடாசுரனை தன் குஞ்சுக் காலால் உதைத்து வதம் செய்த வலிமையை மற்ற ஒரு திருவழுந்தூர் பாசுரமூலம் திருமங்கை நமக்கு பின் வருமாறு சொன்னார்:

”ஊடேறு கஞ்சனொடு மல்லும் வில்லும்

ஒண் கரியும் உருள் சகடும் உடையச் செற்ற

நீடேறு பெருவலித் தோள் உடைய வென்றி

நிலவுபுகழ் நேமியங்கை நெடியோன் காண்மின்

சேடேறு பொழில்தழுவுமெழில் கொள்

வீதித்திருவிழவில் மணியணிந்த திண்ணைதோறும்,

ஆடேறு மலர்க் குழலார் பயிலுஞ் செல்வத்

தணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே”

தன்மேல் உருண்டு, தன்னைக் கொல்ல வந்த வண்டிச்சக்கர ரூபம் கொண்ட சகடாசுரனை உதைத்து, அவன் உடல் முறியும்படிசெய்து அவனை வதம் செய்த பராக்ரமசாலியான பாலக்ருஷ்ணன் கோயில் கொண்ட இடம் தேரழுந்தூர் என இங்கு திருமங்கை சொன்னார்.

இந்த்ரனின் கோபத்தால் ஏற்பட்ட குளிர்மழையிலிருந்து கோகுலத்தைக் காப்பாற்றிய பால கோபாலனை “குன்றால் மாரி தடுத்தவன்” என ஒரு திருவழுந்தூர்

www.sadagopan.org

பாசுரத்திலும், “பண்டானுய்ய வோர் மால் வரை ஏந்தும் பண்பாளா, பரனே, பவித்திரனே!” என்று மற்ற ஒரு பாசுரத்திலும் திருமங்கை நமஸ்கரித்துக் கொண்டார். “பண்டு, ஆன் உய்ய, ஓர் மால் வரை ஏந்தும் பண்பு ஆளா” என பாசுர வாக்யங்களை பிரிக்கும் போது, அன்றொரு நாள் க்ருஷ்ணாவதாரத்தில், பசுக்கள் இந்த்ர கோபத்திலிருந்து பிழைக்க, கோவர்த்தனம் என்ற குன்றை கையில் தாங்கிய உதார குணமுடையவன், ஆமருவியப்பன் என்பது தெளிவாகிறது.

நப்பின்னைக்காக, ஏழு எருதுகளைக் கொன்று, அவளை மணப் பரிசாகப் பெற்ற கண்ணனின் சௌர்யத்தை “மழுவிடை அடர்த்து….உகந்த மாயோன் காண்மின்” என திருமங்கை குறிப்பிட்டார். நப்பின்னையை மணக்க, அவள் தகப்பனார் ஒரு பணயம் வைத்திருந்தார். முரட்டு ஸ்வாபவமுள்ள ஏழு எருதுகளை அடக்குபவன் தன் பெண்ணை கல்யாணம் செய்து கொள்ளலாம் என்பது நிபந்தனை. நப்பின்னைக்கோ கண்ணனிடம் தணியாக் காதல் உண்டு. அவளை மணப்பதற்காக, க்ருஷ்ணன் ஒரே தாவாக தாவி, அந்த ஏழு எருதுகளின் கொம்புகளையும் ஒடித்து, அவைகளை வதம் செய்து, பந்தயத்தில் ஜெயத்து நப்பின்னையை பரிசாகப் பெற்றான். இதை “….கார்வண்ணா! கடல்போலொளி வண்ணா இறுத்திட்டு ஆன்விடையேழு முன் வென்றாய், எந்தாய்…” எனச் சொன்னார்.

கண்ணன், யமுனைக்கரையில் சாயங்கால வேளையில், சந்த்ரோதய சமயம், புல்லாங்குழல் எடுத்து தெய்வீகமான வேணுகானம் செய்ததையும், பின்னர் கோபிகைகளோடு ராஸக்ரீடை செய்து அவர்களை மகிழ்வித்ததையும், “குரவை கோத்து….உகந்த மாயோன் காண்மின்” எனச் சொன்னார். கோபிகைகளுடன் ராஸக்ரீடை புரிந்த தேவாதி தேவனே, அழகிய பொன்னால் ஆன மதிள்கள் உடைய திருஅழுந்தூரில் கோயில் கொண்ட ஆமருவியப்பன் என்ற தத்வத்தை “அம் பொன் மதிள் பொழில் புடை சூழ்ந்தழகார் செல்வத்தணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே”, “மலர்க்குழலாள் ஆய்ச்சி….உண்டுகந்த மாயோன்” என்று விளக்கினார்.

ஆமருவியப்பன், க்ருஷ்ணாவதார சமயம் குவாலயபீடம் என்ற கம்ஸனின் யானையைக் கொன்றதையும், மல்லர்களை மாய்த்ததையும், கடைசியாக கம்ஸவதம் செய்ததையும் இரு பாசுரங்களில் பின் வருமாறு சொன்னார்.

“கறுத்துக் கஞ்சனையஞ்ச முனிந்தாய்

கார்வண்ணா கடல் போலொளிவண்ணா

www.sadagopan.org

இறுத்திட்டான் விடையேழும் முன் வென்றாய்

எந்தாய்! அந்தரமேழுமுன் ஆனாய்

பொறுத்துக் கொண்டிருந்தாற் பொறுக்கொணாப்

போகமே நுகர்வான் புகுந்து ஐவர்

அறுத்து தின்றிடவஞ்சி நின்னடைந்தேன்

அழுந்தூர் மேல்திசை நின்ற அம்மானே”

கம்ஸன் மேல் சீற்றம் கொண்டு, அவன் மேல் பாய்ந்து அவனை நீ கொன்றாய். நீலமேகக்கண்ணா! என்னப்பனே! லோகங்கள் ஏற்படுவதற்கு முன்னரே விளங்கிய ஆதிபுருஷா! ஐம்புலன்கள் என்னை வதைத்து, துண்டு, துண்டாக வெட்டி சுவைப்பதற்கு முன் உன்னிடம் ஓடோடி வந்தேன். என்னைக் காப்பது உன் பொறுப்பு எனத்திருமங்கை மேற்காணும் பாசுரத்தில் சொன்னார்.

கம்ஸனிடம் கோபம் கொண்டு, மல்லர்களையும், குவாலய பீடம் என்ற யானையையும், பூஜையில் இருந்த வில்லையையும் அழித்ததை மற்றும் ஓர் திருவழுந்தூர் பாசுரத்தில் பின் வருமாறு சொல்லி கண்ணனின் வீரச்செயல்களைப் புகழ்ந்தார்:

“ஊடேறு கஞ்சனொடு மல்லும் வில்லும்

ஒண்கரியும் உருள் சகடுமுடையச் செற்ற

நீடேறு பெருவலித் தோளுடையவென்றி

நிலவு புகழ் நேமியங்கை நெடியோனை காண்மின்!”

பூமியின் பாரத்தை குறைப்பதற்காகவும், துர்யோதனன் முதலிய துஷ்டர்களை அழிப்பதற்காகவும், பாரதப்போரில் அர்ஜுனனுக்கு சாரதியாக தொண்டுபுரிந்த கண்ணன் விரும்பி வாழும் இடம் தேரழுந்தூர் என மற்ற ஒரு பாசுரத்தில் திருமங்கை பின் வருமாறு சொன்னார்:

பாரித்தெழுந்த பட மன்னர் தம்மை மாள, பாரதத்துத்

தேரில் பாகனாயூர்ந்த தேவ தேவனூர் போலும்

நீரில் பணைத்த நெடு வாளைக்கு

அஞ்சிப் போன குருகினங்கள்

www.sadagopan.org

ஆரல் கவுளோடருகணையும்

அணியார் வயல்சூழ் அழுந்தூரே”

கடைசியாக, தன் பேரனான அநிருத்தனை உபத்ரவித்த பாணாசுரனை யுத்தத்தில் தோற்க அடித்து அவனுடைய உதவிக்கு வந்த பரமசிவன், சுப்ரமண்யன், பூதகணங்கள் எல்லோரையும் தன் பராக்ரமத்தால் விரட்டிய கண்ணனின் பெருமையை திருமங்கை பின்வரும் பாசுரம் மூலம் கொண்டாடினார்:

”உடையானை ஒலி நீருலகங்கள் படைத்தானை

விடையான் ஓட அன்று விறலாழி விசைத்தானை

அடையார் தென்னிலங்கை அழித்தானை அணியழுந்தூர்

உடையானை அடியேனடைந்துய்ந்து போனேனே”

ஆயிரம் கைகள் கொண்ட பாணாசுரன், கண்ணனை எதிர்த்து வந்தான். அவன் பரம சிவபக்தன். அதனால் மஹேஸ்வரனும், அவனுக்கு உதவ வந்தார். நடந்த யுத்தத்தில், ஒருவரும் கண்ணனை ஜயிக்க முடியவில்லை. பாணாசுரனுக்கு இரு கைகள் மாத்ரம் விட்டு வைத்து, மற்ற கைகள் எல்லாவற்றையும் கண்ணன் அறுத்து அவனுக்கு உயிர்பிச்சை அளித்தார். பிறகு, யுத்தத்தில் வெற்றிபெற்று, பேரனான அநிருத்தனையும், மருமகள் ஆன பாணாசுரனின் பெண்ணான உஷையையும் கண்ணன் த்வாரகைக்கு அழைத்துச் சென்றார்.

பல நூற்றாண்டுகள் பின் பிறந்த ஸ்ரீ நாராயணபட்டதிரி திருமங்கை விவரித்த பாணாசுர யுத்தத்தை விவரித்து, கண்ணன் பாணாசுரனை வென்றது மாத்ரம் அல்லாது, வருணன், அக்னி, இந்த்ரன், யமன், ப்ரஹ்ம்மா முதலியவர்களை மற்ற சந்தர்ப்பங்களில் ஜெயித்ததை எடுத்துக் காட்டி, க்ருஷ்ணாவதார சமயத்தில் தங்களை எதிர்த்து வென்றவர்கள் யாரும் கிடையாது என்று பின் வருமாறு சொன்னார்:

मुहुस्तावच्छक्रं वरुणमजयो नन्दहरणे

यमं बालानीतौ दवदहनपानेऽनिलसखम्।

विधिं वत्सस्तेये गिरिशमिह बाणस्य समरे

विभो विश्वोत्कर्षी तदयमवतारो जयति ते॥

www.sadagopan.org

முஹுஃஸ்தாவச்சக்ரம் வருணமஜயோ நந்தஹரணே

யமம் பாலாநீதௌ தவதஹனபாநேऽநிலஸகம்|

விதிம் வத்ஸஸ்தேயே கிரிசமிஹ பாணஸ்ய ஸமரே

விபோ விச்வோத்கர்ஷீ ததயமவதாரோ ஜயதி தே||

திருமங்கை போல், ஸ்ரீ நாராயணபட்டதிரி என்ற பரம க்ருஷ்ண பக்தர் கண்ணனின் வீரபராக்ரமத்தைக் கொண்டாடினார்.

**6) ஆமருவியப்பனை பரகாலநாயகியாக திருமங்கை அனுபவித்தது**

திருஅழுந்தூர் பெருமானை தசாவதார ஸ்வரூபனாக அனுபவிக்கும் 19 பாசுரங்களில் 10 கண்ணனாக அனுபவித்தவை என முன் சொன்னேன். ஆகவே, திருமங்கை ஆமருவியப்பனை, கன்றுகள் பின் சென்று கானம் சேர்ந்துண்ட அழகனாக மிகவும் அனுபவித்தார். கண்ணனின் ராஸக்ரீடைகளைப் பற்றி பாடிய சமயம், தானும் நப்பின்னை, ருக்மணி, ஸத்யபாமை போல் ஒரு நாயகியாகி அவனுடன் கூடிக்குலவ வேணும் என்ற ஆசை மிகவும் ஏற்பட்டது. இந்த உணர்ச்சி உத்வேகத்தால், திருமங்கை, நாயகி பாவம் அடைந்து, நான்கு பாசுரங்கள் மூலம் தான் ஆமருவியப்பனுடன் கூடியதை நமக்கு தெரிவிக்கிறார். ஆமருவியப்பன், தன் அருகில் வந்து, தன்னை மயக்கி, தன் உள்ளம் கவர்ந்ததை முதல் பாசுரத்தில் பின் வருமாறு தெரிவித்தார்:

"ஏடிலங்கு தாமரை போல் செவ்வாய் முறுவல் செய்தருளி

மாடு வந்தென் மனம் புகுந்து நின்றார்"

அழகிய இதழ்களுக்கு ப்ரஸித்தமான தாமரை புஷ்பத்தைப் போல் சிவந்த உதடுகளில் தேங்கிய புன்னகை மூலம், என்னை மயக்கி, என்னருகில் வந்து நின்று, எப்போதும் என் மனத்திலேயே ஆணியால் எழுதினாற் போல் அகலாது ஆமருவியப்பன் இருக்கிறார் என மேற்காணும் பாசுரத்தில் திருமங்கை சொல்கிறார்.

இரண்டாவது பாசுரத்தில், சாயங்கால வேளையில், தான் தயார் செய்த புஷ்ப மஞ்சமடைந்து, தன்னிடம் காதல் புரிந்து, தன்னை ஆமருவியப்பன் பிரிந்து விடுவானோ என்று கண் கலங்கிய சமயம், உன்னை விட்டு அகலேன் என்று உறுதியுடன் கூறி, அருகிலேயே இருப்பதை திருமங்கை பின் வருமாறு விவரித்தார்:

"மாலைப்புகுந்து மலரணைமேல் வைகி அடியேன் மனம் புகுந்து என் நீலக்கண்கள்

www.sadagopan.org

பனிமல்க நின்றார்"



தேரழுந்தூர் திவ்ய தம்பதிகள்

திருவழுந்தூர் தனக்கு நாயகனாக ஆமருவியப்பன் அருள் புரிந்ததால் விசேஷமான நினைவுகளை ஞாபகப் படுத்தும் மங்களமான திவ்யதேசம் என்று பரகால நாயகியான திருமங்கை மற்றும் இருபாசுரங்களில் சொல்லுகிறார். முதல் பாசுரப் பகுதி பின் வருமாறு:

"வஞ்சி மருங்குலிடை நோவ மணந்து நின்ற கனவகத்து என்

நெஞ்சு நிறையக்கை கூப்பி நின்றார் நின்றவூர் போலும்"

போன பாசுரத்தில் ஆமருவியப்பன் தன்னுடன் கலந்து குலாவிய பின், தன்னைக் கைவிட்டுப் போய்விடுவானோ என்ற பயத்தால் "நீலக்கண்கள் பனி மல்க" நின்றதை பரகால நாயகி சொன்னாள். அவன், தன்னைக் கைவிடாது கூடவே இருப்பதாக ஆறுதல் சொன்ன தைர்யத்தில், ஆமருவியப்பனின் அணைப்பிலேயே பரகால நாயகி

www.sadagopan.org

தூங்கிவிடுகிறாள். அது சமயம், அவள் ஒரு கனவு காண்கிறாள். அந்த கனவில், தன்னை ஆதுரத்துடன் புணர்ந்து ஆமருவியப்பன் அனுபவித்ததாகவும், அவன் நாணமில்லாது நாயகியான தன்னை அனுபவித்ததற்காக இருகைகளையும் கூப்பி மன்னிப்பு கேட்டதாகவும் சொல்கிறான். கண்விழித்து எழும்போது, ஆமருவியப்பன் மறைந்து விட்டான். கனவில் கண்ட விஷயங்கள் என் மனதில் என்றும், பசுமரத்தாணி போல் அழியாது தங்கியிருக்கும் என பரகால நாயகி மேற்காணும் பாசுரத்தில் சொன்னாள்.



தேரழுந்தூர் மூலவர் - உதஸவர்

நாயகியாக, ஆமருவியப்பனை அனுபவித்த கடைசி பாசுரத்தில், தான் அவனிடம் மதியிழந்ததையும், அவன் தன் ஐம்புலன்களையும், சௌந்தர்யத்தையும் கொள்ளை கொண்டு, தன் பட்டாடைகள் கசங்கிய பின் தன்னை விட்டுப் பிரிந்ததையும் பின் வருமாறு விவரித்தார்:

"என் ஐம்புலனும் எழிலுங்கொண்டு இங்கே நெருநல் எழுந்தருளி

பொன்னங்கலைகள் மெலிவு எய்த போன புனிதர் ஊர் போலும்"

www.sadagopan.org

என்னுடன் கலந்து, என்னை பிரிந்த ஆமருவியப்பன் ஊர், திருஅழுந்தூர் போலும் என பரகால நாயகி முகமாக சொன்னார்.



தேரழுந்தூர் கோயில்

## 7) முடிவுரை

தேரழுந்தூரில் கோயில் கொண்டுள்ள ஆமருவியப்பனை திருமங்கை மன்னன் 45 பாசுரங்களில் பாடிப் போற்றிய விஷயங்கள் பற்றி இதுவரை எழுதினேன். தெய்வத் தமிழ்நாட்டின் ஞானபூமியில் "வான் பொய்ப்பினும் தான் பொய்யாத" வளமுடைய காவேரி நதிக் கரையில், தேரழுந்தூரில் ஆமருவியப்பன், பக்தர்களுடைய அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொண்டு கருட விமான நிழலில் நிற்கிறான். சக்ரவர்த்தித் திருமகனின் திவ்ய சரித்ரத்தை தமிழில் பாடி, ஜனங்களின் பக்தியை வளர்க்க, தன் க்ஷேத்ரத்தில் கம்பர் என்ற மஹாகவியை பிறப்பித்து வைத்த பெருமை, ஆமருவியப்பனுக்கே உரியதாகும். "தர்மோ விக்ரஹவான்" என்று ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் வணங்கிய தர்ம மங்கள விக்ரஹமான ஸ்ரீராமசந்த்ரனைப் பற்றி கம்பராமாயணம் என்ற

www.sadagopan.org

புனித நூலைச் செய்ய கம்ப நாட்டாருக்கு, ஆமருவியப்பன் அனுக்ரஹம் புரிந்தார். காவேரி நதி, உத்தரவாஹினியாய் ப்ரவஹிக்கும் இடத்திற்கு அருகில் உள்ள தேரழுந்தூர், பல ப்ரபலமான வைஷ்ணவ தலங்களை அருகில் கொண்டு, பலகாலமாக ஜனங்களின் பக்தியை வளர்த்து வந்திருக்கிறது. இப்பேற்ப்பட்ட புண்ய க்ஷேத்ரமான, திருவழுந்தூரில் கோயில் கொண்டுள்ள ஆமருவியப்பனை திருமங்கை மன்னன் பாசுரங்கள் மூலம் ஸேவிக்க முடிந்தது, அவன் செய்த அனுக்ரஹத்தாலேயே. அவனுடைய தர்ஸன ப்ராப்தி கூடிய சீக்கிரமே அளிக்க வேண்டிக் கொண்டு இந்த கடிதத்தை இங்கு முடிக்கிறேன்.

திருமங்கை மன்னன் திருவடிகளே சரணம்,

தங்களன்புள்ள

V.Sadagopan

May 31, 1987

ப்ரபவ வருஷம் வைகாசி மாதம் 17-ம் நாள் ஞாயிறு தினம்

புனர்வஸு நக்ஷத்ரம், சதுர்த்தி திதி



www.sadagopan.org